விலை: 60.00
பக்கங்கள் : 20
website : www.valampurii.lk
viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com
Registered as a Newspaper in Srilanka

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.03, 2ம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/=

# வலம்புரி
## சங்குநாதம்

சங்கு 25
ஒலி 131 வள்ளுவர் ஆண்டு 2055 சித்திரை 15 ஞாயிற்றுக்கிழமை (28.04.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

### எதிர்வரும் 13ஆம் திகதியிலிருந்து
## காங்கேசன்துறை - நாகபட்டினம் கப்பல் சேவை மீண்டும் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - காங்கேசன் துறைக்கும் தமிழ்நாடு நாகப் பட்டினத்திற்கும் இடையிலான கப்பல் சேவை எதிர்வரும் 13ஆம் திகதி மீண்டும் ஆரம்பமாகவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கப்பல் சேவைக்காக கொள்வனவு செய்யப்பட்ட 'சிவகங்கை' கப்பல் மே மாதத்தின் முதல் வாரத்தில் அந்தமானில் இருந்து சென்னை நோக்கி பயணிக்கவுள்ளது.

அங்கு மறுசீரமைப்புப் பணிகள் நிறைவடைந்த பின்னர், மே மாதம் 11ஆம் திகதி நாகை மாவட்டத்தில் இருந்து காங்கேசன் துறைக்கு பரீட் 19

### பருத்தித்துறையில்
## கிருமித் தொற்றால் குடும்பஸ்தர் மரணம்

(கரணவாய்)

உடலில் கிருமித் தொற்று ஏற்பட்டு இளம் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பருத்தித்துறை புனித நகர்ப் பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் அதேயிடத்தைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான கோணேஸ் வரராசா நிசாந்தன் (வயது-34) என்பவரே 19

## யாழில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு
### அரிசி விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கான அரிசி விநியோகம் குறித்து யாழ். மாவட்ட பதில் அரசாங்க அதிபர் ம.பிரதீபன் ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

யாழ்.மாவட்டத்திலுள்ள 15 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் 19

# மனித உரிமை மீறல்கள் இலங்கையில் அதிகரிப்பு
### சர்வதேச மன்னிப்புச் சபை சாடல்

(கொழும்பு)

**இலங்கையில் கடுமையான மனித உரிமை மீறல் சம்பவங்கள் இடம்பெறுவதாக சர்வதேச மன்னிப்புச் சபை தனது அறிக்கையில் சுட்டிக் காட்டியுள்ளது.**

குறித்த அறிக்கையில், சர்வதேச மன்னிப்புச் சபை, தமது உலகளாவிய வருடாந்த அறிக்கையில் இலங்கை அரசின் மனித உரிமை மீறல்களைக் கடுமையாகச் சாடியுள்ளது. 02

AMNESTY INTERNATIONAL

### சாவகச்சேரி கச்சாயில்
## பாடசாலை சென்ற மாணவியைக் காணவில்லை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி கச்சாயில் பாடசாலைக்குச் சென்ற 15 வயது மாணவி ஒருவர் வீடு திரும்பவில்லை என நேற்று சனிக்கிழமை சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் மாணவியின் பெற்றோரால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.


சனிக்கிழமை காலை சாவகச்சேரியில் அமைந்துள்ள பாடசாலைக் 19

## ஏற்றுமதிப் பொருளாதாரத்தை உருவாக்குவதே அரசின் நோக்கம்
### ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

சந்தைப்பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்டதும், அதிக போட்டித்தன்மை கொண்டதுமான ஏற்றுமதி பொருளாதாரத்தை உருவாக்குவதே அரசாங்கத்தின் நோக்கம் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித் தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்விலேயே இத 19



## ஐ.எம்.எப்பின் கடன் ஜூன் மாதம் கிடைக்கும்
### நிதி இராஜாங்க அமைச்சர்

(அநுராதபுரம்)

சர்வதேச நாணய நிதியத்தின் அடுத்த கடன் தவணை ஜூன் மாதத்தில் நாட்டிற்கு கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுவதாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

அநுராதபுரத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே 19

## மனித முக அமைப்புடன் பிறந்த ஆட்டுக்குட்டி



(கொழும்பு)

இலங்கையில் மனித முக அமைப்பை கொண்ட ஆட்டுக் குட்டி ஒன்று பிறந்துள்ளது.

தெனியாய, விஹார ஹேன செல்வ கந்த பிரதேசத் 19

## ஜப்பான் அமைச்சர் இலங்கைக்கு



19

## அமெரிக்க கப்பலுக்கு இலங்கை அனுமதி மறுப்பு

(கொழும்பு)

இலங்கை கடற்பரப்பிற்குள் பிரவேசிப்பதற்கு அமெரிக்க ஆய்வுக் கப்பல் ஒன்று விடுத்த கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை கடற்பரப்பிற்குள் எந்தவொரு ஆய்வுக் கப்பலும் பிரவேசிக்க அனுமதிப்பதில்லை என அரசாங்கம் எடுத்த கொள்கை முடிவின் அடிப்படையில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

கப்பலை உள்ளே செல்ல அனுமதிப்பதில்லை எனத் தீர்மானிக்கப்பட்டுள்ள போதிலும், சர்வதேச 19

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏற்றுமதி பிரச்சினைகளுக்கு புதிய அணுகுமுறை தேவை

## எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் ஏற்றுமதித் துறையில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு காண புதிய அணுகுமுறை தேவை என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் அண்மையில் நடைபெற்ற தேசிய ஏற்றுமதியாளர் சபையின் கூட்டத்தில் கலந்து கொண்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு ஏற்றுமதி துறையை விரிவுபடுத்தும் ஐக்கிய மக்கள் சக்தியின் திட்டத்தையும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் முன் வைத்தார்.

ஏற்றுமதியை அதிகரிப்பதற்கு தொழில்நுட்ப அணுகுமுறை மூலம் செயற்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டது.

அத்துடன், ஏனைய நாடுகளுடன் பல புதிய சுதந்திர வர்த்தக உடன் படிக்கைகள் கைச்சாத்திடப்பட வேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார். (நி-6)

### மனித உரிமை...

அதன்படி, நீதி மற்றும் போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்குவதற்கான விடயத்தில் இலங்கை அரசு குறிப்பிடத்தக்க முன்னேற்றம் எதனையும் காணாத நிலையில், தண்டனையின்மை தொடர்ந்தும் நிலைபெற்றுள்ளது என்று சர்வதேச மன்னிப்புச் சபை குறிப்பிட்டுள்ளது நாட்டின் பொருளாதார நெருக்கடி வறுமைக் கோட்டுக்குக் கீழேயுள்ள மக்களின் எண்ணிக்கையை இரட்டிப்பாக்கியுள்ளது.

உள்நாட்டுவிசாரணைஆணையங்கள் பொறுப்புக் கூறலை உறுதி செய்யத் தவறியதால், பாதிக்கப்பட்ட சில சமூகங்கள் இந்தத் திட்டங்களை முற்றிலுமாக நிராகரித்தன.

அத்துடன் மனித உரிமை மீறல்களில் தண்டனையின்மைக்கான எடுத்துக்காட்டுகளாக உள்நாட்டு நீதிமன்ற அமைப்பில் மீண்டும் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் இல்லாமல் இழுத்தடிக்கப்பட்டுள்ளது என்றும் சர்வதேச மன்னிப்புச் சபை சுட்டிக்காட்டியுள்ளது.

கருத்துச் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்த இலங்கை அரசு மேற்கொண்டு வரும் தொடர் முயற்சிகளையும் சர்வதேச மன்னிப்புச் சபை கடுமையாகச் சாடியுள்ளது.

கடந்த நவம்பரில் மட்டக்களப்பில் நினைவேந்தல் ஊர்வலத்துக்காக 9 தமிழர்கள் கொடூரமான பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட சம்பவத்தை சர்வதேச மன்னிப்புச் சபை மேற்கோள் காட்டியுள்ளது.

இந்தச் சட்டத்தை இரத்துச் செய்வதாக உறுதியளித்த போதிலும், இலங்கை அரசு பயங்கரவாதத் தடைச் சட்டத்தை தொடர்ச்சியாகப் பயன்படுத்தி வருகின்றது.

இலங்கையின் இணையப் பாதுகாப்பு யோசனையையும், பௌத்தத்தை விமர்சித்ததற்காக சமூக விமர்சகர்கள் கைது செய்யப்பட்டதையும் சர்வதேச மன்னிப்புச் சபை விமர்சித்துள்ளது.

இதேவேளை, இலங்கையில் போராட்டங்கள் இராணுவத்தினர் மற்றும் பொலிஸாரால் கடுமையாக ஒடுக்கப்படுவதால், சர்வதேச சமூகம் அதன் பாதுகாப்புப் படைகளின் பயிற்சி மற்றும் ஏற்பாடுகள் உட்பட இலங்கை அரசுடனான ஒத்துழைப்பை அவசரமாக மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்றும் சர்வதேச மன்னிப்புச் சபை வலியுறுத்தியுள்ளது. (ம-7,10)

# தாய்வானில் மீண்டும் சக்திவாய்ந்த நிலநடுக்கம்

(தைபேய்)

தாய்வானின் ஹுவாலியன் நகரில் நேற்று சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஒன்று ஏற்பட்டுள்ளது.

குறித்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 6.1 ஆக பதிவு செய்யப் பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, தாய்வானின் தலைநகர்தைபேயிலும் நில நடுக்கம் உணரப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலையில், இந்த நில நடுக்கத்தால் இதுவரை எந்தவொரு சேதமும் ஏற்படவில்லை என தாய்வான் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (நி-6)

# வாகன இறக்குமதி தொடர்பில் ஆலோசனை

## நிதி இராஜாங்க அமைச்சர்

(கொழும்பு)

தனியார் வாகன இறக்குமதிக்கான கட்டுப்பாடுகளை நீக்குவது தொடர்பில் ஆலோசித்து வருவதாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது நிதி இராஜாங்க அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

பொருளாதாரத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தாத வகையில் தனியார் வாகனங்களுக்கான இறக்குமதி கட்டுப்பாடுகளை நீக்க நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போதைய நிலைவரப்படி, தனியார் வாகனங்களுக்கான இறக்குமதி அனுமதிப்பது முக்கியமாகவுள்ளது. ஏனைய இறக்குமதிகளுக்கான தடை படிப்படியாக நீக்கப்பட்டதனை போன்று இந்த தடையும் நீக்கப்படும்.

நாட்டின் பொருளாதாரத்திற்கு பாதிப்பு ஏற்படாத வகையில் இந்த வாகன இறக்குமதி தடை நீக்கப்படும். அதற்கான கலந்துரையாடல் இடம்பெற்று வருகின்றது.

அதற்கமைய, எதிர்வரும் நாட்களில் படிப்படியாக வாகன இறக்குமதி தடை நீக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-7,10)

# மரண அறிவித்தல்



தோற்றம் 01 - 08 - 1953

மறைவு 27 - 04 - 2024

## திரு.குமாரவேலு கிருபாகரன் (மிருக வைத்தியர்)

குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரு.குமாரவேலு கிருபாகரன் அவர்கள் 27.04.2024 இறைபதம் அடைந்தார்.

அன்னார் அமரர்களான குமாரவேலு-பத்மாவதி தம்பதியினரின் அன்பு மகனும் அமரர்களான இராமலிங்கம் - நல்லம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் அமரர் சிவதேவி (உமா) அவர்களின் அன்புக் கணவரும் அமரர் கருணாகரனின் சகோதரனும் தீனபந்து (பிரான்ஸ்),தேசபந்து ஆகியோரின் பாசமிகு தந்தையும் சாந்தாவின் மாமனாரும் அகனின் தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 12 மணியளவில் (28.04.2024) அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தனக்கிரியைக்காக குப்பிளான் காடாகரம்பை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு
077 114 1493
077 834 6282

தகவல்:
[illegible]

(597)


## சணல் ஆடுகள் விற்பனைக்கு

இடம் - வட்டுக்கோட்டை தென்மேற்கு
02 சணல் கடாய் 14 மாதம்
190,000/-
01 சணல் மறி ஆடு குட்டிகளுடன்
( 1 கடாய் 1 மறி )
95,000 /-
(591)

076 234 6416

## வேலையாள் தேவை

மேசன் வேலைக்கு ஆட்கள் தேவை

(593)

077 102 2763

## வீடு வாடகைக்கு

யாழ்.மாநகர சபை பிரதேசத்தில் சகல வசதியுடன் கூடிய வீடு சைவ போசனம் சாப்பிடுபவர்களுக்கு மட்டும் வாடகைக்கு உண்டு (588)

077 711 5596
SK.Sarma


# ஓராண்டு நினைவுகளில்

எமது பாடசாலை ஆசிரியை
திருமதி சாந்தினி குகநாதன்
அவர்களின் அன்புத் தாயார்

## கண்ணையா செல்வலட்சுமி



பிறப்பு : 12.02.1944 இறப்பு : 28.04.2023

அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு நாளில் அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திப்பதோடு அவரின் பிரிவினால் ஆறாத் துயருறும் அவரது குடும்பத்தினருடன் துயர் பகிர்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/சென்.ஜோசப் வித்தியாலயம்

(0032)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனியார் மருத்துவ பல்கலைக்கழகத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டம்

**(மட்டக்களப்பு)**

**தனியார் மருத்துவ பல்கலைக்கழகத்திற்கு எதிர்ப்பு தெரிவித்தும் அரச பல்கலைக்கழகங்களின் வசதி வாய்ப்பினை ஏற்படுத்துமாறு வலியுறுத்தியும் மட்டக்களப்பில் நேற்று முன்தினம் மாலை மாபெரும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.**






'கே.டி.யு மூலம் மருத்துவ பட்டத்தினை விற்கும் அமைச்சரவை தீர்மானத்தை முறியடிப்போம்' என்னும் தொனிப் பொருளில் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சௌக்கிய பராமரிப்பு பீடத்தின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு நகரில் இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மட்டக்களப்பு பிள்ளையாரடியில் உள்ள பல்கலைக்கழகத்தின் சௌக்கிய பராமரிப்பு பீடத்திலிருந்து ஊர்வலமாக வந்த மாணவர்கள் மட்டக்களப்பு நகரில் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கொத்தலாவல பல்கலைக் கழகத்தில் மருத்துவபீடத்தினை தனியார் மயப்படுத்தி அரச பல்கலைக்கழகங்களின் செயற்பாடுகளை முடக்கும் வகையிலான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக இங்கு குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன.

இதன் போது கே.டி.யு மூலம் கல்வியை இராணுவ மயமாக்குவதை நிறுத்து, தேசிய கல்விக் கொள்கை கட்டமைப்பினை உடனடியாக வாபஸ்வாங்கு, கொத்தலாவல மருத்துவ கறுப்புச் சந்தையினை உடனடியாக நிறுத்துங்கள், அரச பல்கலைக்கழகங்களின் பிரச்சினைகளுக்கு தீர்வினை வழங்கு போன்ற பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு பேரணி நடைபெற்றது.

மட்டக்களப்பு பொலிஸ் தலைமையகத்திற்கு முன்பாக வந்த மாணவர்கள் அங்கு தீப்பந்தங்களை ஏந்திய போராட்டத்தில் ஈடுபட்டதுடன் இலவச கல்வியை தனியார் மயப்படுத்தும் நடவடிக்கைகளை தடுத்து நிறுத்துவோம் என பல்வேறு கோசங்கள் எழுப்பப்பட்டன.

மாணவர்களின் போராட்டம் காரணமாக அப்பகுதியில் போக்குவரத்து நெரிசல்கள் ஏற்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (நி-6)

# சுவீடன் சென்ற அநுரவுக்கு விமான நிலையத்தில் வரவேற்பு



(ஸ்டாக்ஹோம்)

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க நேற்று சனிக்கிழமை காலை சுவீடனின் ஸ்டாக்ஹோம் விமான நிலையத்தை சென்றடைந்தார்.

அங்கு அவருக்கு அந்நாட்டில் வசிக்கும் இலங்கையர்களால் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டுள்ளது.

அநுரகுமார திசாநாயக்க கடந்த வியாழக்கிழமை இரவு இலங்கையிலிருந்து சுவீடனுக்கு பயணமானார்.

இந்நிலையில், சுவீடனில் இடம்பெறவுள்ள மக்கள் சந்திப்பு மற்றும் சினேகபூர்வமான சில ஒன்றுகூடல்களிலும் அவர் பங்கேற்கவுள்ளார். (நி-6)

# அதிகரித்துள்ள ரூபாயின் பெறுமதி

(கொழும்பு)

இந்த ஆண்டு ஏப்ரல் 26 ஆம் திகதி வரையிலான கால கட்டத்தில், டொலருக்கு நிகரான ரூபாய் மதிப்பு 9 வீதம் அதிகமாக உயர்ந்துள்ளது.

அத்துடன், ஏனைய வெளிநாட்டு நாணயங்களுடன் ஒப்பிடுகையில் ரூபாவின் பெறுமதி மிகைப்படுத்தப்பட்டுள்ளதாக மத்திய வங்கியின் அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

அதன்படி, ஜப்பானிய யென்னுக்கு எதிராக ரூபாயின் மதிப்பு 20 சதவீதமும், பவுண்ட் ஸ்டெர்லிங்கிற்கு எதிராக 11 சதவீதமும் உயர்ந்துள்ளது.

யூரோவுக்கு எதிராக ரூபாயின் மதிப்பு 12.6 சதவீதமும், இந்திய ரூபாய்க்கு எதிராக 9.2 சதவீதமும் அதிகமாக உயர்ந்துள்ளதாக மத்திய வங்கி குறிப்பிட்டுள்ளது. (நி-6)

# பின்னடைவுகள் இருந்தாலும் விரைவில் முடிவை எட்ட முடியும்

## இலங்கை தொடர்பில் ஐ.எம்.எப் நம்பிக்கை

(கொழும்பு)

இலங்கையின் தனியார் கடன் வழங்குநர் கடன் மறுசீரமைப்பில் பின்னடைவுகள் இருந்தாலும், விரைவில் ஒரு முடிவை எட்ட முடியும் என்று சர்வதேச நாணய நிதியத்தின் ஆசியா மற்றும் பசுபிக் துறையின் இயக்குநர் கிருஸ்ணா சீனிவாசன் குறிப்பிட்டுள்ளார்

உத்தியோகபூர்வ கடன் வழங்குநர்களுடனான கலந்துரையாடல்களில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களை அவர் சுட்டிக் காட்டியுள்ளார்

இந்த பேச்சுவார்த்தைகளில் ஒரு பார்வையாளராக சர்வதேச நாணய நிதியத்தின் பங்கை அவர் மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

தனியார் துறை மறுசீரமைப்பில் பின்னடைவுகளை அவர், ஒப்புக்கொண்ட போதிலும், நடந்து கொண்டிருக்கும் உரையாடல் குறித்து நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இந்த நிலையில் இலங்கையில் பணவீக்கம் குறைப்பு மற்றும் இருப்பு அதிகரிப்பு போன்ற பொருளாதார குறிகாட்டிகளின் முன்னேற்றங்களை சீனிவாசன் மேற்கோள்காட்டியுள்ளார்.

எவ்வாறாயினும், எதிர்காலத்தில் உள்ள சவால்களைப் பற்றி எச்சரித்த அவர், தொடர்ந்து சீர்திருத்தங்கள், குறிப்பாக நிதிக் கொள்கைகள் மற்றும் கட்டமைப்பு சீர்திருத்தங்களின் அவசியத்தை வலியுறுத்தியுள்ளார்

குறிப்பிடத்தக்க வகையில், சீர்திருத்தத்திற்கான முக்கிய பகுதிகளாக நிர்வாகத்தை மேம்படுத்துதல் மற்றும் ஊழல் குறைப்பு ஆகியவற்றின் முக்கியத்துவத்தை சீனிவாசன் வலியுறுத்தியுள்ளார். (நி-6)

# ஏழு நாடுகளுக்கு இலவச விசா வழங்க அமைச்சரவை இணக்கம்

(கொழும்பு)

இலங்கையின் சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதற்காக ஏழு நாடுகளுக்கு இலவச விசா வழங்க அமைச்சரவை இணக்கம் தெரிவித்துள்ளதாக சுற்றுலா, காணி, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் நிலையியற் கட்டளை 27(2)இன் கீழ் கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அமைச்சர் மேலும் கூறியதாவது, இதன் படி இந்தியா, இந்தோனேசியா, ரஷ்யா, சீனா, தாய்லாந்து உள்ளிட்ட ஏழு நாடுகளைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகளுக்கு இலவச விசா வழங்கப்படவுள்ளது.

மேலும் 60 நாடுகளுக்கு இலவச விசா வழங்குவதற்கான தீர்மானத்தை மேற்கொள்ள குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. (நி-6)

# எரிபொருள் விலை மாறாது

## இராஜாங்க அமைச்சர் சானக தெரிவிப்பு

(கொழும்பு)

உலக சந்தையில் எரிபொருளின் விலை அதிகரித்தாலும், எமது கட்டணத்தில் மாற்றம் ஏற்படாது என மின்சக்தி மற்றும் வலுசக்தி இராஜாங்க அமைச்சர் டீ.வி.சானக தெரிவித்துள்ளார்.

எரிசக்தி துறையுடன் தொடர்புடைய இறக்குமதி, தரம், விநியோகம் மற்றும் சந்தைப்படுத்தல் ஆகியவற்றிற்கு ஒரு சுயாதீனமான ஒழுங்குமுறை அமைப்பின் அவசியத்தை கண்டறிந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் இந்த சுயாதீன அமைப்பை நிறுவுவதன் நோக்கம், நாட்டில் இறக்குமதி செய்யப்படும் அனைத்து பெற்றோல், டீசல், ஜெட் எரிபொருள், எல்பிஜி, எல்என்ஜி மற்றும் மசகு எண்ணெய் ஆகியவற்றின் தரம், விநியோகப் போட்டி மற்றும் விலைகளை ஒழுங்குபடுத்துவதாகும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நிலையான நாட்டிற்கு ஒரே பாதை என்ற தொனிப்பொருளில் ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அவர் இதனை தெரிவித்துள்ளார். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஐ.பி.எல்லில் ராஜஸ்தான் 'அரசாட்சி' சாம்சன் படை 'அத்தாட்சி'

- எதிர்ப்பின்றி லக்னோவை வீழ்த்தியது
- பிளே ஓப் வாய்ப்பையும் உறுதி செய்தது

அணித் தலைவர் சாம்சன், துருவ் ஜூரெல் அரைசதம் விளாச ராஜஸ் தான் அணி 7 விக்கெட்டுக்கள் வித்தி யாசத்தில் வெற்றி பெற்றது.

லக்னோவில் நடந்த ஐ.பி.எல்., லீக் போட்டியில் ராஜஸ்தான் - லக்னோ அணிகள் மோதின. நாணயச்சுழற்சி யில் வென்ற ராஜஸ்தான் அணித் தலைவர் சஞ்சு சாம்சன் களத்தடுப்பை தேர்வு செய்தார்.

**ராகுல் அரைச்சதம்**

லக்னோ அணிக்கு குயின்டன் டி கொக் (8), ஸ்ராய்னிஸ் (0) ஏமாற்றினர். பின் அணித் தலைவர் ராகுல், தீபக் ஹூடா சேர்ந்து அணியை மீட்டனர். அவேஷ் கான் வீசிய 8ஆவது ஓவரில் 2 சிக்சர், ஒரு பவுண்டரி உட்பட 21 ஓட்டங்கள் விளாசிய ராகுல், சகால் பந்தை பவுண்டரிக்கு அனுப்பி அரைச் சதம் கடந்தார். பவுல்ட் வீசிய 11ஆவது ஓவரில் 2 பவுண்டரி விரட்டிய ஹூடா, 30 பந்துகளில் அரைசதம் எட்டினார். 3ஆவது விக்கெட்டுக்காக 115 ஓட்டங் களைச் சேர்த்த போது அஷ்வின் "சுழலில்" ஹூடா (50) சிக்கினார். பூரன் (11) நிலைக்கவில்லை. அவேஷ் பந்தில் ராகுல் (76) ஆட்டமிழந்தார்.

20 ஓவர்களில் லக்னோ அணி 5 விக் கெட்டுக்களை இழந்து 196 ஓட்டங்களை எடுத்தது. படோனி (18), குர்னால் (15) ஆட்ட மிழக்காமல் இருந்தனர்.

**சாம்சன் அசத்தல்**

சவாலான இலக்கை விரட்டிய ராஜஸ் தான் அணிக்கு பட்லர் (34), ஜெய்ஸ்வால் (24) ஜோடி நல்ல ஆரம்பம் கொடுத்தது. ரியான் பராக் (14) நிலைக்கவில்லை. பின் இணைந்த அணித் தலைவர் சஞ்சு சாம்சன், துருஜ் ஜூரெல் அரைச்சதம் விளாசினர். யாஷ் தாகூர் வீசிய 19வது ஓவரில் வரிசையாக ஒரு பவுண்டரி, ஒரு சிக்சர் விளாசிய "ஹீரோ" சாம்சன் வெற்றியை உறுதி செய்தார்.

ராஜஸ்தான் அணி 19 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை இழந்து 199 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது.

சாம்சன் 71, ஜூரெல் 52 ஓட்டங்கள் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

எட்டாவது வெற்றியை பதிவு செய்த ராஜஸ்தான் அணியின் "பிளே-ஓப்" வாய்ப்பு பிரகாசமாக உள்ளது.

(ம-7,10)



# இறுதி ஓவரில் டில்லி வெற்றி

## மும்பை அணி ஏமாற்றம்

கடைசி ஓவரில் அசத்திய டில்லி அணி 10 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

டில்லி, அருண் ஜெட்லி மைதானத் தில் நடந்த ஐ.பி.எல்., லீக் போட்டியில் டில்லி - மும்பை அணிகள் மோதின.

நாணயச்சுழற்சியில் வென்ற மும்பை அணித் தலைவர் ஹர்திக் பாண்ட்யா களத்தடுப்பை தேர்வு செய்தார்.

**பிரேசர் விளாசல்**

டில்லி அணிக்கு பிரேசர்-மெக்குர்க், அபிஷேக் போரெல் ஜோடி நல்ல ஆரம்பம் கொடுத்தது. லூக் உட் வீசிய முதல் ஓவரில் 3 பவுண்டரி, ஒரு சிக்சர் விளாசிய பிரேசர்-மெக்குர்க் 15 பந்தில் அரைச்சதம் கடந்தார்.

தொடர்ந்து அசத்திய இவர், ஹர் திக் பாண்ட்யா வீசிய 5வது ஓவரில் 2 சிக்சர், 2 பவுண்டரி விளாசினார். முதல் விக்கெட்டுக்காக 114 ஓட்டங்கள் சேர்த் போது சாவ்லா "சுழலில்" பிரேசர்-மெக்குர்க் (84 ஓட், 6 சிக்சர், 11 பவுண்டரி) சிக்கினார்.

அபிஷேக் (36), ஷாய் ஹோப் (41 ஓட்., 5 சிக்சர்) நம்பிக்கை தந்தனர். கேப்டன் ரிஷாப் பன்ட் (29) நிலைக்க வில்லை. அடுத்து வந்த டிரிஸ்டன் ஸ்டப்ஸ், லூக் உட் வீசிய 18 ஆவது ஓவரில் 5 பவுண் டரி, ஒரு சிக்சர் உட்பட 26 ஓட்டங்கள் விளாசினார்.

20 ஓவர்களில் டில்லி அணி 4 விக்கெட்டுக்களை இழந்து 257 ஓட்டங்களை எடுத் தது. ஸ்டப்ஸ் (48), அக்சர் படேல் (11) ஆட்டமிழக்காமல் இருந்த னர்.



**ரோகித் ஏமாற்றம்**

சவாலான இலக்கை விரட்டிய மும்பை அணிக்கு ரோகித் சர்மா (8) ஏமாற்றினார். இஷான் கிஷான் (20), சூர்யகுமார் யாதவ் (26) சோபிக்க வில்லை. குல்தீப் யாதவ் வீசிய 9ஆவது ஓவரில் "ஹட்ரிக்" பவுண்டரி, ஒரு சிக்சர் விளாசிய ஹர்திக் பாண்ட்யா (46) நம்பிக்கை தந்தார். வதேரா (4) சொதப்பினார். குல்தீப் வீசிய 15ஆவது ஓவரில் 2 சிக்சர், 2 பவுண்டரி விரட்டிய திலக், லிசாட் வில்லியம்ஸ் பந்தை பவுண் டரிக்கு அனுப்பி 25 பந்தில் அரைசதம் எட்டினார். ரிம் டேவிட் (37) ஆறுதல் தந்தார்.

கடைசி ஓவரில் வெற்றிக்கு 25 ரன் தேவைப்பட்டன. முகேஷ் குமார் பந்து வீசினார். முதல் பந்தில் 2வது ஓட்டத்துக்கு ஓடிய திலக் (63) "ரன்-அவுட்" ஆனார். அடுத்த 5 பந்தில் 13 ரன் மட்டுமே கிடைத்தது.

20 ஓவர்களில் மும்பை அணி 9 விக்கெட்டுக்கு 247 ஓட்டங்கள் எடுத்து தோல்வியடைந்தது.

போட்டியின் பிரேசர் நாயகனாக தெரிவானார். (7,10)

**15 பந்தில் அரைசதம்**

அதிவேக அரைசதம் (15 பந்து) விளாசிய டில்லி வீரர்கள் வரிசை யில் தனது சொந்த சாதனையை சமன் செய்தார் பிரேசர். சமீபத்தில் ஐதராபாத் அணிக்கு எதிராக 15 பந்தில் அரைசதம் அடித்திருந்தார்.

# 'ஏழாவது' அதிசயம் ரொமாலியா ரி20 அரங்கில் சாதனை

"ரி20" போட்டியில் ஒரு ஓட்டம் கூட கொடுக்காமல், 7 விக்கெட்டுக்களை வீழ்த்தி சாதனை படைத்தார் ரொமாலியா.

இந்தோனேஷியா சென்றுள்ள மங்கோலிய பெண்கள் அணி, அங்கு 6 போட்டிகள் "ரி20" தொடரில் பங்கேற்கிறது.


பாலியில் நடந்த ஐந்தாவது போட்டியில், முதலில் துடுப்பெடுத் தாடிய இந்தோனேஷியா 20 ஓவர் களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 151 ஓட்டங்கள் எடுத்தது.

பின் களமிறங்கிய மங்கோலிய அணி, 17 வயது வீராங்கனையான ரொமாலியா "சுழலில்" சரிந்தது. மங் கோலிய அணி 16.2 ஓவர்களில் 24 ஓட்டங்களுக்கு சுருண்டது.

இந்தோ னேஷியா 127 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இதன்மூலம் தொடரில் 5-0 என முன் னிலை பெற்றது.

இப்போட்டியில் அறிமுகமான ரொமாலியா, முதல் பந்திலேயே விக் கெட் வீழ்த்தினார். 20 பந்துகளில் ஒரு ரன் கூட கொடுக்காமல் 7 விக்கெட் டுக்களைச் சாய்த்தார். 5 பேரை "டக்" அவுட்டாக்கினார். இதன் மூலம் சர்வதேச "ரி20" அரங்கில் (ஆண்கள்/ பெண்கள்) சிறந்த பந்துவீச்சை பதிவு செய்து சாதனை படைத்தார். இதற்கு முன் நெதர்லாந்து "வேகப்புயல்" பிரட ரிக் ஓவர்டிஜ்க் 3 ஓட்டங்கள் கொடுத்து 7 விக்கெட்டுக்களை வீழ்த்தி இருந் தார். ஆட்டநாயகி விருதை ரொமா லியா (3.2-3-0-7) தட்டிச் சென்றார்.




**அசத்தல் அறிமுகம்**

சர்வதேச "ரி20" அரங்கில் அறி முக போட்டியில் சிறந்த பந்து வீச்சை பதிவு செய்த வீராங்கனை யானார் ரொமாலியா(7/0). இதற்கு முன் நேபாளத்தின் அஞ்சலி சந்த் (2.1-2-0-6, எதிர்: மாலைதீவு, 2019) சாதித்திருந்தார்.

**முத்திரை பதித்த மூவர்**

சர்வதேச பெண்கள் "ரி20" அரங்கில் 7 விக்., வீழ்த்தியவர்கள்.

- ரொமாலியா (இந்தோனேஷியா) 7/0 மங்கோலியா 2024
- பிரடரிக் (நெதர்லாந்து) 7/3 பிரான்ஸ் 2021
- அலிசன் (ஆர்ஜென்ரீனா) 7/3 பெரு 2022

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜப்பானிய வெளிவிவகார அமைச்சர் இலங்கை விஜயம்



(கொழும்பு)

ஜப்பானிய வெளிவிவகார அமைச்சர் யோகோ கமிகாவா இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயமாக அடுத்த மாத தொடக்கத்தில் இலங்கைக்கு வருகை தரவுள்ளார்.

இந்த விஜயத்தின் போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரதமர் தினேஷ் குணவர்தன, வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி ஆகியோரை அவர் சந்திக்கவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

கொழும்பு துறைமுகத்தை கண்காணிப்பதிலும் அவர் ஈடுபடவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவரது விஜயத்தின் போது இருதரப்பு கடன் மறுசீரமைப்பு தொடர்பான இறுதி ஒப்பந்தம் குறித்தும் விவாதிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.(நி-6)


## விற்பனைக்கு

**வேப்பமரம் 6 அடி சுற்று**
**25 ஸ்ரீ உழவு இயந்திரம்**
**(விலை 500 000/=)**

(585)

தொடர்புகளுக்கு-
**076 262 2236**



## அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் கோவில் திருவிழாக் கடைகள் வழங்கல்

எமது ஆலய மகோற்சவம் 13.05.2024 முதல் 24.05.2024 வரை இடம் பெறவுள்ளது.

திருவிழாக் காலக்கடைகள் 05.05.2024 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு ஆலய முன்றலில் குலுக்கல் முறையில் வழங்கப்படும் என்பதை அறியத்தருகிறோம்.

28.04.2024 (566)

**தர்மகர்த்தாக்கள் சபை**


## வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம் ஆதனப் பெயர்மாற்றம்
### 110/29, சங்கரத்தை வீதி, வட்டாரம்-02

வலிகாமம் மேற்கு பிரதேச சபை சங்கானை உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் 02, சங்கரத்தை வீதியிலுள்ள இல: 110/29 ஆகிய ஆதனம் எமது ஆதனவரிப்பதிவேட்டின் பிரகாரம் கார்த்திகேசு பொன்னம்பலம் என்றே காணப்படுகிறது.

கந்தையா ஜெயதரனும் பெண் இரதிவதனாவும், பொன்னம்பலம் ரதிமோகனும் ஆகியவர்கள் பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை உள்ளடக்கிய ஆதனத்தின் ஓர் பகுதியானது தங்களில் 2ம், 3ம் பேரின் பிதாவான காலஞ்சென்ற கார்த்திகேசு பொன்னம்பலத்தின் தந்தை தாயாரால் அவருக்கு முதுசமாக உறுதி எழுதப்பட்டிருந்தது எனவும், அவ்வுறுதி இடப்பெயர்வின் போது தவறிப்போய்விட்டது எனவும், அதனைப்பெற்றுக் கொள்ள முயற்சி செய்தும் எடுக்க முடியவில்லை எனவும், குறித்த ஆதனம் நீண்ட காலமாக தங்களால் தங்கு தடையற்று ஆட்சிசெய்யப்பட்டு வந்தது எனவும் வெளிப்படுத்தி பிரசித்த நொத்தாரிசு ப.இராசகுரு முகதாவில் 4438/17.02.2004 ஆம் இலக்கத்தில் வெளிப்படுத்தல் உறுதியொன்றை நிறைவேற்றியிருந்தார்கள்.

வையாபுரி இராமன் பிரசித்த நொத்தாரிசு ப.இராசகுரு முகதாவில் நிறைவேற்றப்பட்ட 4439/17.02.2004 ஆம் இலக்க உறுதியால் குறித்த கந்தையா ஜெயதரனும் பெண் இரதிவதனாவும், பொன்னம்பலம் இரதிமோகனும் ஆகியவர்களிடமிருந்து குறித்த ஆதனத்தை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை உள்ளடக்கிய ஆதனத்தின் மற்றைய பகுதியை வையாபுரி இராமன் ஆகியவர் குறித்த ஆதனமானது தனது பெற்றோர் ஆண்டனுபவித்து இறக்க அவர்களின் ஒரே வாரிசான தன்னை வந்தடைந்தது எனவும், குறித்த ஆதனம் தொடர்பான சகல ஆவணங்களையும் பெற்றோர் உயிருடன் இருக்கும் போதே தொலைத்து விட்டார்கள் என்றும் அதனைப்பெற்றுக் கொள்ள முயற்சி செய்தும் முயற்சி பலனளிக்கவில்லை எனவும், குறித்த சட்டப்படியான உரித்தாளர் தானே எனவும் வெளிப்படுத்தி பிரசித்த நொத்தாரிசு இ.வசந்தசேனன் முகதாவில் 7200/ 18.02.2006 ஆம் இலக்கத்தில் வெளிப்படுத்தல் உறுதியொன்றை நிறைவேற்றியிருந்தார்.

சுதாகரன் பெண் ஜெயந்தி பிரசித்த நொத்தாரிசு ப.இராசகுரு முகதாவில் நிறைவேற்றப்பட்ட 8536/01.01.2012 ஆம் இலக்க உறுதியால் குறித்த வையாபுரி இராமன் ஆகியவரிடமிருந்து குறித்த முழு ஆதனத்தினையும் நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

தம்பையா செல்வராசாவும் பெண் நாகநந்தினியும் பிரசித்த நொத்தாரிசு ப.இராசகுரு முகதாவில் நிறைவேற்றப்பட்ட 8590/ 03.02.2012 ஆம் இலக்க உறுதியால் குறித்த சீவரத்தினம் சுதாகரனும் பெண் ஜெயந்தியும் ஆகியவர்களிடமிருந்து குறித்த ஆதனத்தை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்கள்.

செல்லன் இரத்தினம் கைம்பெண் பொன்னம்மா பிரசித்த நொத்தாரிசு இ.சபேசன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 4824/14.05.2013 ஆம் இலக்க உறுதியால் குறித்த தம்பையா செல்வராசாவும் பெண் நாகநந்தினியும் ஆகியவரிடமிருந்து குறித்த ஆதனத்தை நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

செல்லன் இரத்தினம் கைம்பெண் பொன்னம்மாவும், செல்வராசா குபிதாஸ் உம் ஆகியவர்கள் குறித்த ஆதனத்தில் தமக்கு இருக்கும் சீவிய உரித்தினை 1 ஆம் பேரின் மகனும் 2 ஆம் பேரின் மாமனாருமாகிய இரத்தினம் கிருஷ்ணன் ஆகியவருக்கு நன்கொடையாக வழங்குவதாக பிரசித்த நொத்தாரிசு இ.வசந்தசேனன் முகதாவில் 7613/20.11.2017 ஆம் இலக்கத்தில் சீவிய உரித்து நன்கொடை உறுதியொன்றை நிறைவேற்றியிருந்தார்கள்.

இரத்தினம் கிருஷ்ணன் பிரசித்த நொத்தாரிசு இ.வசந்தசேனன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 1613/25.09.2023 ஆம் இலக்க உறுதியால் குறித்த செல்லன் இரத்தினம் கைம்பெண் பொன்னம்மா ஆகியவரிடமிருந்து குறித்த ஆதனத்தை நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்கள்.

குறித்த இரத்தினம் கிருஷ்ணன் ஆகியவர் ஆதனப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்.

இவ் ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபணை தெரிவிப்பர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது இரத்தினம் கிருஷ்ணன் ஆகியவருக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

(572)

**செயலாளர், வலிகாமம் மேற்கு பிரதேசசபை.**

# இராசிபலன்

**28.04.2024**
**சித்திரை 15, ஞாயிற்றுக்கிழமை**
**சதுர்த்தி முற்பகல் 7.04 மணிவரை**
**மூலம் பின்னிரவு 3.11 மணிவரை**

**சுபநேரம் 8.58-10.28 மணிவரை**
**இராகுகாலம்-4.28-5.58 மணிவரை**

**சந்திராஷ்டமம்**
**பரணி.**

**வளவன்**




மனதில் இருந்த பாரம் குறையும், ஆன்றோர்களின் சந்திப்பு இடம் பெறலாம், சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், அச்சுறுத்தல்கள் அகலும்.




பொதுநல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், பகையொன்று நட்பாகலாம், உறவினர் வருகையால் உற்சாகம் பெறுவீர்கள், பலநாட்களாக செய்ய நினைத்த வேலையொன்றை இன்று செய்வீர்கள்.




சகோதர வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, உடல் நலனில் அக்கறை கூடும், வருமானம் திருப்தி தரும்.




பெரியவர்களின் ஆலோசனையைக் கேட்டு நடப்பது நல்லது, தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.




அல்லல்கள் தீர இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், வருமானத்திற்கு மிஞ்சிய செலவுகள் ஏற்படலாம், உடல்நலனில் அதிக அக்கறை காட்டும் நிலை ஏற்படலாம்.




பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் வாய்ப்புண்டு, பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, தாழ்ந்த சுபாவமுண்டு.




நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும் வாய்ப்புண்டு, பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், தொழில் வளர்ச்சி கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.




செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், எதிர்பார்த்த பண வரவுகள் வந்து சேரலாம், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், போசன சுகமுண்டு.




வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, நண்பர்களால் சில நன்மைகள் நடைபெறலாம், விருந்தினர் வருகையால் கலகலப்பான சூழ்நிலை உருவாகும்.




காலைப்பொழுதே கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், சுப நிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், கொள்கைப்பிடிப்போடு செயற்படுவீர்கள், சுப விரயங்கள் அதிகரிக்கும்.





சவால்களை சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள், வழக்கமான பணிகளில் சுணக்கம் ஏற்படலாம், எதிர்பாராத காரியமொன்று நடைபெறும் வாய்ப்புண்டு.




மற்றவர்கள் மத்தியில் உங்களின் மதிப்பும் மரியாதையும் உயரும், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, தொழில் நலன் கருதி முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள்.

**ஒவ்வொரு மனிதனும் தனது பாரத்தை சுமக்க வேண்டும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்.வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் (நாச்சிமார் கோவில்) பூங்காவனம் திருவிழா கடந்த வியாழக்கிழமை பக்தி பூர்வமாக இடம்பெற்றது. (படம்: சிவசாந்தன்)

# இரத்ததான முகாம்

(சாவகச்சேரி)

யாழ்.போதனா மருத்துவமனையில் நிலவுகின்ற குருதிப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் முகமாக தென்மராட்சி இளைஞர்களின் ஏற்பாட்டில் இன்று ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இரத்ததான முகாம் இடம்பெறவுள்ளது.

எனவே குருதித் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் முகமாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இரத்ததான முகாமில் பங்கெடுத்து உதவுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். (நி-6)

# கிளிநொச்சி நகர்ப்பகுதியில் சிரமதானப்பணி முன்னெடுப்பு



(கண்டாவளை)

கிளிநொச்சி நகரை தூய்மைப்படுத்தும் செயற்றிட்டம் நேற்று முன்னெடுப்பு. கிளிநொச்சி நகரை தூய்மைப் படுத்தும் செயற்றிட்டத்தின் கீழ் வடக்கு மாகாண பொலிஸ் திணைக்களத்தின் ஏற்பாட்டில் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தின் ஒழுங்குபடுத்தலில் இராணுவத்தினர் சிவில் பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் ஆகிய இணைந்து குறித்த சிரமதானப் பணியை முன்னெடுத்திருந்தனர்

கிளிநொச்சி பொலிஸ் நிலையத்திலிருந்து குறித்த சிரமதான பணியானது இரு பகுதியாக கரடிப் போக்கு வரையும் மற்றைய பிரிவு இரணைமடு சந்தி வரையும் முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6-316-315)

# வேலைவாய்ப்பு அமைச்சின் நடமாடும் சேவை முல்லையில்

(நெளுக்குளம்)

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சினால் நடத்தப்படுகின்ற குளோபல் பெயார் என்கின்ற நடமாடும் சேவை மே மாதம் 3.4 ஆம் திகதிகளில் முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேசசபை மைதானத்திலே இடம்பெறவுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் ஊடக சந்திப்பின் போது மாவட்ட அரசாங்க அதிபர் அ.உமாமகேஸ்வரன் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சி.குணபாலன் ஆகியோர் இந்த நடமாடும் சேவை தொடர்பில் விளக்கங்களை வழங்கியிருந்தனர்.


இந்த நடமாடும் சேவையிலே முல்லைத்தீவு மாவட்டத்தை சேர்ந்தவர்களை பங்குபற்றி பயன் பெறுமாறு முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் அ.உமாமகேஸ்வரன் கோரிக்கை விடுத்துள்ளார். (நி-6-299)

# மேதினப் பேரணியும் பொதுக்கூட்டமும்

(யாழ்ப்பாணம்)

புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் மேதினப் பேரணியும், பொதுக்கூட்டமும் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ளது.

பேரணியானது அன்றையதினம் மாலை 3.30 மணிக்கு ஆரியகுளம் சந்தியில் இருந்து ஆரம்பமாகவுள்ளது. அதனைத் தொடர்ந்து மாலை 4.30 மணிக்கு யாழ்.றிம்மர் மண்டபத்தில் புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் வடபிராந்தியச் செயலாளர் கா.செல்வம் கதிர்காமநாதன் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெறவுள்ளது. (நி-6)



தொண்டமனாறு செல்வச்சந்நிதியான் ஆச்சிரமத்தின் சைவ கலை பண்பாட்டு பேரவையின் ஆன்மீக மாதாந்த வெளியீடான ஞானச்சுடர் 316 ஆவது இதழ் வெளியீடு நேற்று முன்தினம் சந்நிதியான் ஆச்சிரமத்தில் ஆச்சிரம முதல்வர் மோகனதாஸ் தலைமையில் இடம்பெற்றது. (படம்: மகாலிங்கம்)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 120 | 120 | 100-140 | 120 |
| உருளைக்கிழங்கு | 180 | 180 | 150 | 150-155 | 200 |
| பச்சைமிளகாய் | 80 | 100 | 100 | 80-100 | 120 |
| தக்காளி | 100 | 80 | 120 | 100-140 | 150 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 120 | 120 | 100-130 | 150 |
| கோவா | 160 | 160 | 200 | 150 | 250 |
| கரட் | 300 | 300 | 320 | 240 | 300 |
| பூசணி | 100 | 140 | 80 | 100 | 120 |
| புடோல் | 120 | 180 | 100 | 100 | 120 |
| வாழைக்காய் | 100 | 100 | 50 | 80-100 | 120 |
| சின்ன வெங்காயம் | 300 | 320 | 300 | 200-320 | 400 |
| பெரிய வெங்காயம் | 300 | 280 | 300 | 230 | 300 |
| பாகற்காய் | 400 | 300 | 400 | 300 | 400 |
| வெண்டக்காய் | 100 | 150 | 60 | 120-200 | 200 |
| கருணைக் கிழங்கு | 100 | 120 | 100 | -- | 150 |
| பயற்றங்காய் | 150 | 150 | 200 | 150-200 | 120 |
| லீக்ஸ் | 250 | 280 | 280 | 240 | 300 |
| பீற்றூட் | 200 | 150 | 280 | 250 | 300 |
| கறிமிளகாய் | 300 | 300 | 200 | 250 | 200 |
| முருங்கைக்காய் | 500 | 700 | 500 | 400-650 | 600 |
| போஞ்சி | 200 | 320 | 300 | 250 | 400 |
| கத்தரிதம்புள்ள | 100 | 80 | 50 | -- | 100 |
| கீரை - 1 பிடி | 120 | 100 | 100 | 80-100 | 100 |
| தேசிக்காய் | 800 | 700 | 500 | 700-900 | 1000 |
| தேங்காய் (ஒன்று) | 120 | 110 | 110 | 50-100 | 80-120 |
| இராசவள்ளி | 350 | 400 | 300 | 250 | 400 |
| வெங்காயப்பூ | 600 | -- | 200 | -- | 400 |
| முள்ளங்கி | 100 | 100 | 80 | 100 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 60 | 90 | 90 | 60 |
| வல்லாரை | 60 | 160 | 50 | 80 | 80 |
| ஈரப்பலா | -- | -- | 120 | 100 | [illegible] |

# கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் "அரும்பு" கல்விச் செயற்றிட்டத்தின் கீழ் க.பொ.த சாதாரணதர பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கான இலவச வழிகாட்டல் கருத்தரங்கு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது. இக் கருத்தரங்கிற்கு வளவாளராக பிரபல ஆசிரியர் ஜெயகிஸ்டோ கலந்துகொள்ளவுள்ளார்.

க.பொ.த சாதாரண தர பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்கள் இக் கருத்தரங்கில் கலந்துகொண்டு பயனடையுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (நி-6)

# உதைபந்தாட்ட இறுதியாட்டங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர் சங்கம் நடத்தும் யாழ் மாவட்ட அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்ட போட்டியின் இறுதியாட்டங்கள் இன்று ஞாயிற்றுக்கிழமை உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பிற்பகல் 3.30 மணிக்கு 3ம் இடத்திற்கான ஆட்டத்தில் இளவாலை யங்ஹென்றீஸ் அணியை எதிர்த்து சிவானந்தா அணியும், பிற்பகல் 4.30 மணிக்கு நடைபெறவுள்ள இறுதியாட்டத்தில் நாவாந்துறை சென்மேரிஸ் அணியை எதிர்த்து இளவாலை சென்லூட்ஸ் அணியும் மோதவுள்ளன. (நி-6-90)

# காளான் உற்பத்தி பயிற்சிப்பட்டறை

(யாழ்ப்பாணம்)

கரவெட்டிப் பிரதேச செயலகத்தின் விதாதா வள நிலையத்தினால் காளான் உற்பத்தி தொடர்பான பயிற்சிப்பட்டறை நாளை மறுதினம் 30 ஆம் திகதி அன்று நடத்தப்படவுள்ளது.

எனவே மேற்படி துறையில் சுயதொழில் முயற்சிகளை மேற்கொள்ள விரும்பும் இளைஞர், யுவதிகள் மற்றும் விவசாயிகள் இப்பயிற்சிப் பட்டறையில் கலந்து கொள்ள விரும்புபவர்கள் 021 226 4958 என்ற தொலைபேசி மூலம் மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியும் எனப் பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்

# சங்குநாதம்

நாதம் 438

Viber 076 636 3378



# இஸ்ரேல்-ஈரான் மோதல் மூன்றாம் உலகப் போர் வெடிக்குமா?

இஸ்ரேல் - ஹமாஸ் போர் நடைபெற்றுக் கொண்டிருக்கும் சூழலில், இன்னொரு பக்கம் இஸ்ரேல் - ஈரான் மோதல் தொடங்கியிருப்பது உலக நாடுகளை அச்சத்தில் ஆழ்த்தியிருக்கிறது. ஏன் இந்த மோதல்... பின்னணி என்ன?

இஸ்லாமியர்கள் பெரும்பான்மையாக வாழும் ஈரான், 1979ஆம் ஆண்டு வரை இஸ்ரேலுடன் நல்லுறவில் இருந்து வந்தது. 1970 களின் இறுதியில் மதச்சார்பின்மைக் கொள்கையைக் கையிலெடுத்தார். ஈரானை ஆண்டுவந்த மன்னர் (ஷா) முகமது ரேஸா பஹ்லவி. பஹ்லவியின் கொள்கைகளை இஸ்லாமிய மத குருமார்கள் கடுமையாக எதிர்த்தனர். 1979 இல் ஈரானில் இஸ்லாமியப் புரட்சி வெடித்தது. முடியாட்சியில் இருந்த பஹ்லவி துரத்தியடிக்கப் பட்டார். இந்தப் புரட்சியின் தொடக்கப்புள்ளியாக இருந்த மத குரு அயதுல்லா கொமேனி ஈரானின் உச்சபட்ச தலைவரானார். ஈரான் இஸ்லாமிய நாடாக அறிவிக்கப்பட்டது.

'பாலஸ்தீனத்தில் இஸ்லாமியர்களை வதைக்கும் இஸ்ரேலை எதிர்ப்பது' என்பதைத் தனது கொள்கைகளில் ஒன்றாக்கிக்கொண்டது புதிய அரசு. லெபனான் - சிரியாவில் ஹிஸ்புல்லா, ஏமனில் ஹவுதி, பாலஸ்தீனத்தின் காசாவில் ஹமாஸ் உள்ளிட்ட இஸ்ரேல் எதிர்ப்பு அமைப்புகளுக்கு மறைமுக ஆதரவுகளை வழங்கி, அவர்களை வளர்த்துவிட்டதில் ஈரானுக்கு மிகப்பெரிய பங்கு உண்டு. இந்த அமைப்புகள் மூலம் இஸ்ரேலுக்குச் சொந்தமான இடங்களில் பல தாக்குதல்களை நடத்தியிருக்கிறது ஈரான். ஆனால், தற்போதுதான் முதன்முறையாகத் தனது பிராந்தியத்திலிருந்து, சொந்த இராணுவத்தின் மூலம் இஸ்ரேலைத் தாக்கியிருக்கிறது ஈரான்.



### ஈரான் கோபமடைந்தது ஏன்?

ஏப்ரல் 1 ஆம் திகதி, சிரியாவின் தலைநகர் டமாஸ்கஸ் இலுள்ள ஈரான் தூதரகக் கட்டடத் தின் மீது வான்வழித் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. இந்தத் தாக்குதலில் ஈரானியத் தளபதிகள், இராணுவ வீரர்கள், சிரியா மக்கள் என 13 பேர் கொல்லப்பட்டதாக ஈரான் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. மேலும், 'இந்தத் தாக்குதலை நடத்தியது இஸ்ரேல்தான்' என்றும் ஈரான் குற்றம்சாட்டியது. இஸ்ரேல் இந்தத் தாக்குதலுக்குப் பொறுப்பேற்கவில்லையென்றாலும், ஹமாஸுக்கு எதிரான போரின் போது, அண்டை நாடுகளான லெபனான், சிரியாவிலும் அவ்வப்போது தாக்குதல் நடத்திவந்தது இஸ்ரேல். எனவே, 'இந்தத் தாக்குதலை இஸ்ரேல் மட்டுமே நடத்தியிருக்க முடியும்' என ஈரான் உறுதியாக நம்புகிறது.

'ஈரான் நிச்சயம் பதில் தாக்குதல் நடத்தும்' என அமெரிக்க உளவுத்துறை எச்சரித்திருந்த நிலை யில், ஈரானும் தாக்குதல் நடத்தத் தயாராகிக் கொண்டிருந்தது. அதன்படி, ஏப்ரல் 13 ஆம் திகதி நள்ளிரவில், இஸ்ரேலை நோக்கி வான் வழியாக சுமார் 300 ட்ரோன்கள் மூலம் தாக்குதல் நடத்தியது ஈரான் இராணுவம். இதில் வெகு சில ட்ரோன்கள் மட்டுமே இலக்குகளை அடைந்த தாகத் தெரிகிறது. பெரும்பாலான ட்ரோன்களை அமெரிக்காவுடன் இணைந்து அழித்திருக்கிறது இஸ்ரேல். ஆனால், தங்களது வான்வழித் தாக்குதல் வெற்றியடைந்திருப்பதாகச் சொல்கிறது ஈரான். இதையடுத்து அவசர அவசரமாக, பாதுகாப்பு கவுன்சில் கூட்டத்தைக் கூட்டிய ஐ.நா., "இன்னொரு போரை உலகம் தாங்காது. உடனடியாகத் தாக்குதல்களை நிறுத்திக்கொள்ள வேண்டும்" எனப் பொதுவாக எச்சரித்தது.

### தமிழர்களைச் சிறைப்பிடித்த ஈரான்?

இந்தத் தாக்குதல்களுக்கு நடுவே, இந்தியாவை நோக்கி மும்பை துறைமுகத்துக்கு வந்துகொண்டிருந்த சரக்குக் கப்பல் ஒன்றை அரபிக்கடலில் வைத்துச் சிறைப்பிடித்திருக்கிறது ஈரான். 'இஸ்ரேலைச் சேர்ந்த தொழிலதிபரின் கப்பல் என்பதால், இதைச் சிறைப்பிடித்திருக்கிறோம்' என ஈரான் தரப்பில் சொல்லப்பட்டிருக்கிறது. இஸ்ரேலோ, கப்பல்களைச் சிறைப்பிடிக்கும் ஈரானின் இஸ்லாமியப் புரட்சிகர காவல் படையைத் தீவிரவாத அமைப்பாக அறிவிக்க வேண்டும்' என்று வலியுறுத்திவருகிறது.

### இஸ்ரேலுக்குச் சாதகம்!

ஹமாஸுக்கு எதிரான போரில், பாலஸ்தீனத்திலுள்ள குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள் உட்பட அப்பாவி பொதுமக்களை இஸ்ரேல் இராணுவம் கொன்று குவித்ததால், அந்த நாட்டுக்கு ஆதரவளித்து வந்த அமெரிக்காவுக்கு உலக அரங்கில் பெரும் அழுத்தங்கள் கொடுக்கப் பட்டுவந்தன. அந்த நிலையில், பாலஸ்தீனத்தின் காசா பகுதியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு வழங்கும் பணியில் ஈடுபட்டிருந்த அமெரிக்காவைத் தலைமையிடமாகக்கொண்ட "வேர்ல்டு சென்ட்ரல் கிச்சன்" தன்னார்வ அமைப்பினர் மீதே தாக்குதல் நடத்தியது இஸ்ரேல். இதில், அவுஸ்திரேலியா, இங்கிலாந்து, அமெரிக்கா, கனடா, போலந்து உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த தன்னார்வலர்கள் ஏழு பேர் கொல் லப்பட்டனர். இதனால், தனது ஆதரவு நிலைப் பாட்டைச் சற்று மாற்றிக்கொண்ட அமெரிக்கா, 'உடனடியாகப் போரை நிறுத்துங்கள்' என இஸ்ரேலை எச்சரித்தது.

"இஸ்ரேலின் இது போன்ற செயல்களால் நட்பு நாடுகளுடன் கசப்பான சூழல் நிலவி வந்த நிலையில், ஈரானின் தாக்குதலுக்குப் பிறகு அமெரிக்கா, பிரான்ஸ் உள்ளிட்ட மேற்கத்தேய நாடுகளின் ஆதரவை மீண்டும் பெற்றிருக்கிறது இஸ்ரேல். உலக அரங்கில் அனுதாபமும் தேடிக் கொள்ளவும் ஈரானின் பதிலடித் தாக்குதலைப் பயன்படுத்திக் கொள்கிறது. மேலும், ஈரான் ஏவிய 300 ட்ரோன் களால் இஸ்ரேலுக்கு எந்தப் பெரிய பாதிப்பும் ஏற்படாதது, ஈரான் இராணுவத்தின் பல வீனத்தை உலகுக்குக் காட்டியிருப்பதும் இஸ்ரேலுக்குச் சாதகமாகவே பார்க்கப்ப டுகிறது" என்கின்றனர் இஸ்ரேல் அரசியலை உற்றுநோக்குபவர்கள்!

### பதில் தாக்குதல் நடத்துமா இஸ்ரேல்?

இஸ்ரேலோடு ஒப்பிடும்போது பரப்பளவிலும், மக்கள்தொகையிலும் வலுவான நாடாக இருக்கிறது ஈரான். ஆனால், இராணுவ பலத்தில் இஸ்ரேல் முந்தி நிற்கிறது. விமானப்படை,ட்ரோன் தடுப்புக் கருவிகள் என வான் பாதுகாப்பில் உலக அளவில் வலுவான நாடு என்று பெயர் பெற்றிருக்கிறது இஸ்ரேல். அதேநேரம், ஈரானின் வான் பாதுகாப்பு மிகவும் மோசமான நிலையில் இருக்கிறது. உக்ரைனுக்கு எதிரான போரில் ரஷ்யாவுக்கு ஆதரவு தெரிவித்ததால், ஈரானின் வான் பாதுகாப்பை மேம்படுத்த ரஷ்யா உதவுவதாகத் தெரிவித்திருந்தது. ஆனால், உக்ரைனுக்கு எதிரான போர் இன்னும் முடியாத நிலையில், ஈரானுக்கு ஆதரவாக ரஷ்யா களமிறங்குமா என்பது கேள்விக் குறியே!

ஈரான் வான்வழித் தாக்குதல் நடத்திய பிறகு, ஈரான் ஆதரவு அமைப்பான ஹிஸ்புல்லாவும் இஸ்ரேல்மீது தாக்குதல் நடத்தி யிருக்கிறது. இந்தத் தாக்குதலில், 14 இஸ்ரேல் வீரர்கள் காயமடைந்திருப்பதாகவும் செய்திகள் வெளியாகியிருக்கின்றன. இந்த நிலையில் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, "தன்னிச்சையாக முடிவெடுத்து ஈரானுக்குத் தக்க பதிலடி கொடுப்போம்" என்றிருக்கிறார். ஈரான் அதிபர் இப்ராஹிம் ரைசியும், "இஸ்ரேல் மிகச்சிறிய படையெடுப்பை ஈரானை நோக்கி எடுக்க நினைத்தால் கூட, அதிபயங்கர விளைவுகளை அவர்கள் சந்திக்க வேண்டியிருக்கும்" என்று எச்சரித்திருக்கிறார்.

### மூன்றாம் உலகப் போர்?

"ஹமாஸை அழிப்பதுதான் இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகுவின் தற்போதைய குறிக்கோளாக இருந்துவருகிறது. இந்த நிலையில், அவர் மற்றொரு போரைத் தொடங்க மாட்டார் என நம்பப்படுகிறது. எனவே, ஈரானுக்கு எதிராக பதிலடித் தாக்குதல் நடத்தி, அந்த நாட்டிலுள்ள முக்கிய இலக்குகளை மட்டுமே இஸ்ரேல் அழிக்க நினைக்கும். ஒருவேளை ஈரான் - இஸ்ரேலுக்கு இடையே போர் மூண்டாலும், அது மூன்றாம் உலகப் போராக மாற வாய்ப்பில்லை. காரணம், அமெரிக்காவில் தேர்தல் நெருங்கிக் கொண்டிருக்கிறது. ரஷ்யா, உக்ரைனுக்கு எதிராகப் போர் செய்துகொண்டிருக்கிறது. பொருளாதார ரீதியாகவும் பல பிரச்சினைகளை உலக நாடுகள் எதிர்கொண்டிருக்கின்றன. எனவே, ஈரானுக்கோ, இஸ்ரேலுக்கோ ஆதரவாக எந்த நாடும் நேரடியாகக் களமிறங்காது" என்கின்றனர் சர்வதேச அரசியல் வல்லுநர்கள்.

ஈரான் - இஸ்ரேல் இடையே அதிகார பூர்வமாக போர் தொடங்குவதற்கு முன், பேச்சுவார்த்தையின் மூலம் பிரச்சினை தீர்க்கப் பட்டு, மத்திய கிழக்கில் ஏற்பட்டிருக்கும் பதற்றம் தணிய வேண்டும்' என் பதே உலக மக்களின் கோரிக்கையாக இருக்கிறது!

ஜூனியர்விகடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

**வா**த்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்களில் கங்காணி கார்த்திகேயனைத் தவிர, மற்றெல்லோரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து ஆலடியில் அமைதி நிலவியது. அமைதியைக் குலைக்க, விதானையார் விசுவலிங்கம் குரல் கொடுத்தார்.

**விதானையார்:-** என்ன சங்கதி இன்னும் கங்காணியாரைக் காணவில்லை.

விதானையார் வினவ, அந்நேரம் பார்த்து கங்காணியார் ஆலடிக்கு வந்து சேர்ந்தார்.

**சாத்திரியார்:-** என்ன கங்காணியார் இண்டைக்கு லேற்றாப் போய்ச்சுது என்ன சங்கதி.

**கங்காணி:-** அதை யேன் கேட்கிறியள். எங்கட மண்ணில ஒருவேலைத்திட்டத்தை ஆரம்பிக்கிற போது, சம்பந்தப்பட்ட நிறுவனம் ஆ..கூ.. எண்டு நிற்கும்.

ஆனால் வேலை கிட்டநெருங்குகிறபோது, அவ்வளவு தான்.

நாங்கள் அவயளத்தேடி அலைய வேணும்.

ரெலிபோன் எடுத்தாலும் பதிலளிக்க மாட்டினம். நானும் ஒரு வேலையைத் தொடங்கி அதைச் செய்து முடிக்க முடியாமல் திரியிறன்.

**மூப்பர்:-** கங்காணியார் சொல்லுறது நூறுவீதம் உண்மை. எங்கட மண்ணில இயங்குகிற நிறுவனங்கள் சரி, ஒப்பந்தகாரர்கள் சரி, வேலை தொடங்கும் போது அந்த மாதிரிக் கதைப்பினம். வேலை ஆரம்பித்த பிறகு, இன்னொரு வேலை கிடைக்கும். அவ்வளவு தான். எங்களைக் கைவிட்டிட்டு புதிய இடத்தில சன்னதம் ஆடுவினம்.

**சிறாப்பர்:-** நீங்கள் இதைச் சொல்லுறியள். எங்கட பிரதேசங்களில இயங்குகிற நிறுவனங்களிட்ட தொடர் சேவையைப் பெறுவதும் கடினமாகத்தானே இருக்குது.

**பண்டிதர்:-** இதால தான் பாருங்க தென் பகுதி ஆட்கள் இஞ்ச வந்து கட்டுமானப் பணியில ஈடுபடுகினம்.

அதோட இப்ப கிழக்கு மாகாணத்தில இருந்து கூட யாழ்ப்பாணத்திற்கு வந்து கட்டுமான வேலைகளில ஈடுபடுகிறதைப் பார்க்கிறம். அவர்களின்ர வேலையிலும் எங்கட ஆட்கள் திருப்திப்படுகினம்.

**விதானையார்:-** நீங்கள் இதைச் சொல் லுறியள். எங்கட பகுதியில வொறன்றி, கரன்றி எண்ட விடயம் மோசமாகத் தானே இருக்குது.

**சாத்திரியார்:-** என்ன விதானையார் சொல்லுறியள்.

**விதானையார்:-** நாங்கள் ஒரு பொருளை வாங்கும் போது அதற்கு ஒரு காலவரையறை இட்டு வொறன்றி அல்லது கரன்றி என உத்தரவாதம் கொடுக்கினம்.

ஆனால் அந்தப் பொருள் பழுதாகிப் போனால், அந்தப் பொருளை வாங்கின கடைக்குக் கொண்டு போய் கொடுத்தால், அந்த வர்த்தக நிலையம் அது பற்றி அலட்டிக்கொள்ளாமல் தங்கடபாட்டில இருக்கும். சிலவேளை அவர்களுக்குக் கோபமும் வருகுது.

அதால சனங்களுக்கு வொரன்றி, கரன்றி என்ற உத்தரவாதங்கள் வெறுப்புகளையும் விரக்தியையும் ஏற்படுத்திப் போட்டுது.

**வாத்தியார்:-** இப்ப எங்கும் மோசடி வேலை மலிந்து போச்சுது. அவரவர் தங்கட கடமையைச் செய்வதில ஆர்வம் இல்லை. எல்லாம் செப்படி வித்தை எண்டாயிற்று.

**மூப்பர்:-** உண்மை தான். யாழ்ப்பாணப்பல்கலைக்கழகத்தில சர்வதேச கல்வி மாநாடு நடைபெற்றது. அந்தக் கல்வி மாநாட்டில பங்குபற்றின கல்வியாளர்கள் மிகக் குறைவு எண்ட குற்றச்சாட்டும் இருக்கத்தான் செய்யுது.

**கங்காணி:-** சர்வதேச கல்வி மாநாட்டை ஏற்பாடு செய்வதற்கு முன்னதாக, அந்த மாநாடு தொடர்பில ஆசிரியர்கள், அதிபர்கள், கல்விச் சமூகத்தினர் என்ற தரப்புகளோட சந்திப்புகளையும் கூட்டங்களையும் நடத்த வேணும்.

குறித்த கல்வி மாநாட்டில கலந்து கொள்ளக் கூடியவர்களின்ர எண்ணிக்கையைத் தீர்மானிக்கிறதோட, அது தொடர்பான விழிப்புணர்வுகளையும் ஏற்பாடு செய்ய வேணும்.

இதைவிட்டிட்டு சர்வதேச கல்வி மாநாடு என்று கூட்டினால், அதில எல்லாரும் கலந்து கொள்ளுவினம் எண்டு நினைக்கிறது மிகப்பெரும் தவறு.

**பண்டிதர்:-** உண்மை தான். யாழ்ப்பாணப்பல்கலைக் கழகத்தின்ர பொன்விழாவையொட்டி சர்வதேச கல்வி மாநாடு நடத்துவது அர்த்தபுஷ்டியான விடயம் தான்.

அதேநேரம் கூட்டப்படுகின்ற கல்வி மாநாட்டில எங்கட தமிழ் மக்களுக்கு என்ன நன்மை எண்டு பார்க்கவும் வேணும்.

எங்கட முதலாவது, இரண்டாவது நிலைக் கல்விச் சமூகம் கலந்து கொள்ளாமல், கல்வி மாநாட்டைக் கூட்டி என்ன தான் செய்ய முடியும்.

ஆகையால யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில நடக்கிற எந்த மாநாடாக இருந்தாலும் அதைப் பெறுமதியாக்க வேணும்.

பெறுமதி என்பது சம்பந்தப்பட்டவர்களில கணிசமானவர்கள் மாநாட்டில கலந்து கொள்வதில் தான் தங்கியிருக்குது.

ஆகையால இனிமேல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் எந்த மாநாடு நடைபெற்றாலும் அதனோட சம்பந்தப்பட்ட பலரையும் கலந்து கொள்ள வைப்பதில அனைவரும் ஈடுபாடு செலுத்த வேண்டும்.

எனப் பண்டிதர் கூற, ஆலடியில் சிறிது நேரம் அமைதி நிலவியது.

அமைதியைக் குலைக்க சிறாப்பர் கனகசபை குரல் கொடுத்தார். அதுசரி. எங்கட யாழ்ப்பாணத்தில வேலை நிறைவடைகின்ற மாலைநேரத்தில வாகனங்களும் பயணிகளும் திக்கு முக்காடுகிறதைப் பார்க்கிறம். ஆக, சிக்னல் உள்ள இடங்களில தான் ஓரளவுக்கு வாகன நெருக்கடி ஒழுங்குபடுத்தப்படுகிறது.


மற்றும்படி கே.கே.எஸ் வீதி, கஸ்தூரியார் வீதி, மின்சாரநிலைய வீதி உள்ளிட்ட யாழ்ப்பாண நகரம் அதிக வாகனங்களால நெருக்கடிக்கு ஆளாகுது.

எனவே வாகன நெருக்கடியைத் தவிர்ப்பதற்கு குறிப்பிட்ட இடங்களில -சந்தியில போக்குவரத்துப் பொலிஸார் நிறுத்தப்பட்டு, போக்குவரத்து நெருக்கடியைச் சீர் செய்தால் என்ன?

சிறாப்பர் கனகசபை இவ்வாறு கூறியதும் அதனை ஆலடி மாநாட்டில ஒரு தீர்மானமாக நிறைவேற்றுவம் என வாத்தியார் கூற, மேற்படி தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

குறித்த தீர்மானத்தைத் தானும் ஆமோதிப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்



## நேர்மையான சேவையை பெறமுடியாத அவலம்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஈரான்-இஸ்ரேல் போர் வெடித்தால் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படுமோ வியாசரே?

**சுதன் — குப்பிளான்**

**டொலரின் பெறுமதி குறைகின்றது என மார்தட்டும் அரசு பொருட்களின் விலை குறைக்காதது ஏன்?**

டொலர் பெறுமதி குறைவது சர்வதேச ரீதியான பிரச்சினை. பொருட்களை விலை குறைப்பது உள்ளூரில் செய்ய வேண்டிய வேலை.

சர்வதேச ரீதியில் இலங்கை பொருளாதார ரீதியில் முன்னேறுகிறது என மார்தட்டிக் கொண்டு இங்கு மக்களின் முதுகில் அவர்கள் சுமக்க முடியாத சுமையை இறக்குவது ஒரு நாளும் ஏற்புடையதல்ல.

ஆதலால் ஆட்சியாளர்கள் உடன் பொருட்களின் விலையைக் குறைத்து மக்கள் சுமையை குறைக்க வழி செய்ய வேண்டும்.

**நிருஷன் — யாழ்ப்பாணம்**

**இந்தப் பிறப்பு போதும் என்ற எண்ணம் வியாசருக்கு எப்போதாவது வந்ததுண்டா?**

தமது சொந்த இனமான தமிழினத்தை ஏமாற்றி பாராளுமன்றம் சென்ற தமிழ் அரசியல்வாதிகளுக்கு ஏன் வாக்களித்தேன் என்று நினைத்த போது அந்த எண்ணம் மேலோங்கி இருந்தது.

விபத்தில் படுகாயம் அடைந்தவரை ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் செல்லாமல் வீடியோ எடுத்து சமூகவலைத் தளங்களில் பரப்பியவர்களைப் பார்க்கும் போது தோன்றியது.

ஏழைக்கு உதவி செய்து அதைப் படம்பிடித்து தமக்கு பாராட்டு விழா செய்ததைக் கண்டபோது தோன்றியது.

உழைத்த பணத்தில் முக்கால்வாசியை சாராயக் கடையில் செலவு செய்ய சோற்றுக்காய் ஏங்கிக் கிடந்த பிள்ளைகளையும் அந்த அபலத் தாயையும் கண்ணுற்ற போது தோன்றியது.

இவை அனைத்தையும் விட பணத்தின் மீது மோகம் கொண்டு அதை தேடி ஓடி ஓடி ஓடிந்து போகும் சில மனிதர்களைப் பார்த்த போது தோன்றியது.

**ராஷா — திருநெல்வேலி**

**வருகிற ஜனாதிபதித் தேர்தலை ஒட்டு மொத்த தமிழரும் புறக்கணித்தால் என்ன வியாசரே?**

புறக்கணிக்கலாம். ஒட்டுமொத்தமாய் புறக்கணித்தால் அதற்கு பலன் கிடைக்கும்.

ஆனால் ஒட்டு மொத்தமாய் புறக்கணிக்கும் அளவில் தமிழினம் ஒற்றுமையாய் இருக்கிறதா என்பதில் தானே பிரச்சினை இருக்கிறது.

அங்கொரு மாடு, இங்கொரு மாடு என குறுக்கே இழுக்கும் மாடுகள் இருக்கும் வரை தமிழினம் பாவப்பட்ட இனமாயும் தோற்றுப் போன இனமாயுமே இருக்கும்.

ஏனென்றால் ஒரு பெரும்பான்மை வேட்பாளரை ஆதரித்தால் கிடைக்கும் வரப் பிரசாதங்கள் அதிகம். அதை இழப்பதற்கு எப்படி எம் தமிழ் அரசியல்வாதிகளுக்கு மனம் வரும்.




**அன்பு வாசகர்களே!**
**உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை**
**076 097 3126**
**என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்**

**இளங்கோ — மானிப்பாய்**

**நீதியின்றிச் செயற்படுவோரையும் அக்கிரமங்கள் புரிவோரையும் இச் சமூகம் உயர்வாக்கி வைத்திருக்கிறதே வியாசரே?**

கடும் இடி, மின்னல், மழையின் மத்தியில் ஒரு பேருந்து சென்று கொண்டிருக்கிறது. திடீரென பேருந்து நின்றுவிட இந்தப் பேருந்தில் ஒரு கெட்டவன் இருக்கிறான். அவனின் உயிரை எடுக்கப் போகிறேன். ஆதலால் ஒவ்வொருவராய் பேருந்தில் இருந்து இறங்கி அதோ அந்த மரத்தில் முட்டி விட்டு வந்து பேருந்தில் அமர வேண்டும்.

கெட்டவரை மின்னல் தாக்கி அவர் உயிரை எடுக்கும் என்றது அந்த இறைவனின் அசரீரி. ஒவ்வொருவராய் பேருந்தில் இருந்து இறங்கி மரத்தில் தொட்டு விட்டு வருகிறார்கள் எவருக்கும் மின்னல் தாக்கவில்லை.பேருந்தின் இறுதி நபர். அங்கிருந்த அனைவரும் அவனை கெட்டவனாகவே கருதினர்.


நீதான் கெட்டவன் போ, போய் மரத்தில் தொடு மின்னல் அடித்து உன் உயிர் போகப் போகிறது.

அவரும் பயப் பீதியுடன் இறைவனை நம்பிய படி குறித்த மரத்தில் தொடுகிறார்.

பளார்... பளார்... பயங்கர இடியுடன் மின்னல் வெட்டியது.

என்ன அதிசயம் அந்த பேருந்தில் இருந்த அனைவரும் இடி மின்னலுக்கு இரையாகிப் போயினர்.இறுதியாக இருந்த ஒருவர் தப்பித்துக் கொண்டார். அவரே நல்லவர்.

இறைவன் அனைத்துக்கும் ஒரு காரண காரியத்தை வைத்திருப்பான் என்பது மட்டும் உண்மையானது.



வருகிற ஜனாதிபதித் தேர்தலை ஒட்டு மொத்த தமிழரும் புறக்கணித்தால் என்ன வியாசரே?

**மதுவன் — மீசாலை**

**தமிழரசுக் கட்சியின் உள் வீட்டுப் பிரச்சினை முடிவுக்கு வராதா வியாசரே?**

உள்வீட்டுப் பிரச்சினை என்பதை விட குடும்பச் சண்டை என்று கூறுவதே முறையானது.

இந்தக் குடும்பச் சண்டையான கணவன்-மனைவிச் சண்டைக்குள் மூன்றாவது நபர் புகுந்தால் அந்தப் பிரச்சினை பூதாகாரமாகவே வெடிக்கும்.

தமிழரசுக் கட்சியின் பிரச்சினையும் இதுவே. அது குடும்பச் சண்டை.

அதை அவர்கள் நான்கு சுவருக்குள் பேசித் தீர்க்க வேண்டியது.

அதை நீதிமன்றத்திற்குக் கொண்டு வந்தால் மன முறிவு, மணமுடிவு என்பது தானே பொருள்.

**தருஷ் — வதிரி**

**ஈரான்-இஸ்ரேல் போர் வெடித்தால் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படுமோ வியாசரே?**

எங்களின் கெட்ட பழக்கமே இது தான். எங்கேயும் போர் வெடித்தால் உடன் எரிபொருளுக்கு வரிசை கட்டி நின்று அதற்கு தட்டுப்பாட்டை ஏற்படுத்தி விடுவது.

ஏதோ ஈரானிடம் தான் எரிபொருள் இருப்பது போலவும் ஈரானில் போர் மூண்டால் எமக்கு எரிபொருள் வராது என்ற தோற்றப்பாட்டை மக்கள் மத்தியில் விதைத்து எரிபொருளுக்கு செயற்கை தட்டுப்பாட்டை ஏற்படுத்துவதை நிறுத்திக் கொள்ள வேண்டும்.

போர் இல்லாமல் இந்த உலகம் இயங்கவில்லை. எந்த நேரத்திலும் உலகின் எங்கோ ஒரு பகுதியில் போர் நடந்து கொண்டு தான் இருக்கிறது. அதனால் பல்லாயிரம் உயிர்கள் பறிக்கப்பட்டுக் கொண்டு தான் இருக்கின்றன.

**ரேவத் — மந்திகை**

**வாழ்க்கை ஒரு வட்டம் என்பதை நீர் ஏற்றுக் கொள்கிறீரா வியாசரே?**

நூறு வீதம் உண்மை.இதற்கு தகுந்த உதாரணம் ஒன்றைக் கூறுகிறேன் கேளும். கரப்பான் பூச்சிக்கு எலியைக் கண்டால் பயம். எலிக்கு பூனையைக் கண்டால் பயம். பூனைக்கு நாயைக் கண்டால் பயம்.

நாய்க்கு மனிதனைக் கண்டால் பயம். மனிதனுக்கு மனிசியைக் கண்டால் பயம். மனிசிக்கு கரப்பான் பூச்சியைக் கண்டால் கடும் பயம்.

இப்போது புரிகிறதா வாழ்க்கை ஒரு வட்டம் என்பதை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம்: குடும்பத் தலைவன்
பாடியவர்: டி.எம். சௌந்தரராஜன்
இயற்றியவர்: கண்ணதாசன்
இசை: கே.வி. மகாதேவன்



திருமணமாம் திருமணமாம் தெருவெங்கும் ஊர்வலமாம்
ஊர்வலத்தின் நடுவினிலே ஒருத்தி வருவாளாம்
ஊர்வலத்தின் நடுவினிலே ஒருத்தி வருவாளாம்
திருமணமாம் திருமணமாம் தெருவெங்கும் ஊர்வலமாம்
ஊர்வலத்தின் நடுவினிலே ஒருத்தி வருவாளாம்
ஊர்வலத்தின் நடுவினிலே ஒருத்தி வருவாளாம்

கூரை நாட்டுப் புடவை கட்டிக் குனிந்திருப்பாளாம் – ஒரு
கூடை நிறையும் பூவைத் தலையில் சுமந்திருப்பாளாம்
கூரை நாட்டுப் புடவை கட்டிக் குனிந்திருப்பாளாம் – ஒரு
கூடை நிறையும் பூவைத் தலையில் சுமந்திருப்பாளாம்
சேர நாட்டு யானைத் தந்தம் போலிருப்பாளாம்
சேர நாட்டு யானைத் தந்தம் போலிருப்பாளாம் – நல்ல
சீரகச்சம்பா அரிசி போலச் சிரிச்சிருப்பாளாம்
சிரிச்சிருப்பாளாம் ஹோஹோஹோஹோ

திருமணமாம் திருமணமாம் தெருவெங்கும் ஊர்வலமாம்
ஊர்வலத்தின் நடுவினிலே ஒருத்தி வருவாளாம்
ஊர்வலத்தின் நடுவினிலே ஒருத்தி வருவாளாம்

செம்பருத்திப் பூவைப் போல செவந்திருப்பாளாம் – நைசு
சிலுக்குத் துணியப் போலக் காற்றில் அசைந்திருப்பாளாம்
செம்பருத்திப் பூவைப் போல செவந்திருப்பாளாம் – நைசு
சிலுக்குத் துணியப் போலக் காற்றில் அசைந்திருப்பாளாம்
செய்புச் சிலை போல உருண்டு தெரண்டிருப்பாளாம்
செய்புச் சிலை போல உருண்டு தெரண்டிருப்பாளாம் நல்ல
சேலஞ்சில்லா மாம்பழம் போல் கனிதிருப்பாளாம்

திருமணமாம் திருமணமாம் தெருவெங்கும் ஊர்வலமாம்
ஊர்வலத்தின் நடுவினிலே ஒருத்தி வருவாளாம்
ஊர்வலத்தின் நடுவினிலே ஒருத்தி வருவாளாம்

ஊர்வலத்தில் வந்தவள் யார் கூறடியம்மா அவள்
உடனிருந்த மாப்பிள்ளை தான் யாரடியம்மா
ஊர்வலத்தில் வந்தவள் யார் கூறடியம்மா அவள்
உடனிருந்த மாப்பிள்ளை தான் யாரடியம்மா
மாலை சூடும் மணமகளும் நீதாண்டியம்மா
மாலை சூடும் மணமகளும் நீதாண்டியம்மா இந்த
மணமகனைக் கண் திறந்து பாரடியம்மா
பாரடியம்மா ஹோஹோஹோஹோ ஹொஹோ

திருமணமாம் திருமணமாம் தெருவெங்கும் ஊர்வலமாம்
ஊர்வலத்தின் நடுவினிலே ஒருத்தி வருவாளாம்
ஊர்வலத்தின் நடுவினிலே ஒருத்தி வருவாளாம்

# ஓல்ரவுண்டர்களை காலி செய்யும் விதியின் விளையாட்டு!

ஐ.பி.எல் தொடர் கூடுதல் சுவாரஸ்யமாக மாறியிருப்பதற்கு மிகமுக்கிய காரணமாகி யிருக்கிறது இம்பாக்ட் ப்ளேயர் விதிமுறை. கடந்த சீசன் முதலே அறிமுகப்படுத்தப்பட்ட இந்த விதிமுறை, இப்போது நேர்மறையாகவும் எதிர்மறையாகவும் பல விவாதங்களைக் கிளப்பியிருக்கிறது.

கிரிக்கெட்டில் ஒவ்வோர் அணிக்கும் தலா 11 பேர். இவர்களில் யாருக்காவது அசௌகரியமோ, காயமோ ஏற்பட்டு ஆடமுடியாமல் போனால், அவர்களுக்குப் பதிலாக சப்ஸ்டிடியூட் வீரரைப் பயன்படுத்த முடியும். அதிலும் அந்த சப்ஸ்டிடியூட் வீரர், ஃபீல்டிங் மட்டுமே செய்யமுடியும். பட்டிங்கோ, பௌலிங்கோ செய்ய முடியாது. பின்னாள்களில் தலை முதலான உடல் பாகங்களில் ஒரு வீரருக்கு அடிபட்டால் அவருக்குப் பதிலாக Concussion Sub என்ற இன்னொரு வீரரை அழைத்து வர முடியும். அவரால் பட்டிங், பௌலிங் என எதை வேண்டுமானா லும் செய்ய முடியும். இது சர்வதேச அளவிலான போட்டிகளுக்கான விதிமுறைகளின் பரிணாமம்.

ஐ.பி.எல் போன்ற லீக் போட்டிகளில் இதே விதிமுறையை இன்னும் அட்வான்ஸாக யோசித்து கிரிக்கெட்டையே 12 பேர் ஆடும் ஆட்டமாக மாற்றிவிட்டார்கள். அவுஸ்திரேலியாவில் நடைபெறும் பிக்பேஸ் லீகில்தான் முதலில் இதே மாதிரியான விதிமுறை ஒன்று அமுல்படுத்தப்பட்டது. அதாவது, 'X Factor Player' என்பது அந்த விதி. அதன்படி, தொடக்க லெவனில் உள்ள ஒரு வீரரை ஆட்டத்தின் இடையில் பென்ச்சுக்கு அனுப்பிவிட்டு, அவருக்கு பதில் இன்னொரு வீரரைப் பயன்படுத்திக்கொள்ள முடியும். ஓர் அணி முதலில் பந்துவீசுகிறது என வைத்துக் கொள்ளுங்கள். அந்த அணியில் உள்ள பௌலர்களை சேஸிங்கில் வைத்து எந்த பலனும் இல்லை. அப்படியான சூழலில் அந்த பௌலரை பென்ச்சில் வைத்துவிட்டு, ஒரு பட்டரை அணிக்குள் கொண்டு வந்துவிடுவார்கள். இந்த விதிமுறை பிக்பேஸ் லீகில் அறிமுகப்படுத்தப்பட்டு நல்ல வரவேற்பைப் பெற்றதைத் தொடர்ந்துதான் ஐ.பி.எல்-இலும் "இம்பாக்ட் ப்ளேயர்" என்கிற விதி அறிமுகப் படுத்தப்பட்டது.

இந்த விதிமுறையைப் பற்றி இப்போது பலவிதமான விமர்சனங்கள் முன்வைக்கப்படுகிறது. ஒரு பக்கம் இந்த விதிமுறை இருபது-20 போட்டிகளை சுவாரஸ்யமாக்கியிருப்பதாகச் சொல்கிறார்கள். இன்னொரு பக்கம்... இது கிரிக்கெட்டின் அடிப்படையையே குலைப்பதாக இருக்கிறது. இதனால் ஆரோக்கியமான மாற்றம் எதுவும் நிகழப்போவதில்லை என்கிறார்கள்.

இந்திய கிரிக்கெட்டின் அனுபவமிக்க வீரர் டோனி. அவருக்கே இந்த விதிமுறையில் இரண்டுவிதமான பார்வைகள் இருக்கின்றன. கடந்த சீசனில் ஒரு கப்டனாக இம்பாக்ட் ப்ளேயர் விதிமுறைப் பற்றிப் பேசிய அவர், கண்டிப்பாக இந்த விதிமுறை அணிகளுக்கும் கப்டன்களுக்கும் கூடுதலாக ஒரு வீரரைப் பயன்படுத்திக்கொள்ளும் சௌகரியத்தைக் கொடுத்திருக்கிறது. ஆனாலும், இந்த விதிமுறையின் மூலம் ஓல்ரவுண்டர்களின் முக்கியத்துவம் ஆட்டத்தில் குறையும் என நினைக்கிறேன் எனக் கூறியிருந்தார்.

இம்பாக்ட் ப்ளேயர் விதிமுறையைப் பற்றி ஆரம்ப கட்டத்திலேயே வெளிப்பட்ட சரியான குரல் இது. டோனி சொன்னதைப் போல இது, எல்லா அணிகளுக்கும் கொஞ்சம் கூடுதல் சௌகரியத்தைக் கொடுக்கிறது. அதேநேரத்தில் ஓல்ரவுண்டர்களின் முக்கியத்துவத்தையும் குறைக்கிறது.

உதாரணத்திற்கு சென்னை அணியையே எடுத்துக் கொள்ளலாம். சென்னை அணி ஒவ்வொரு போட்டியிலும் சிவம் துபேவை இம்பாக்ட் ப்ளேயராக இறக்கிக்கொண்டிருக்கிறது. அதாவது சென்னை அணி பௌலிங் செய்யும் போது, சிவம் துபே அணியில் இருக்கமாட்டார். பௌலிங் முடிந்தவுடன் ஒரு பௌலரை உட்கார வைத்துவிட்டு இவரை பட்டிங்கிற்கு மட்டும் அழைத்துக்கொள்வார்கள். முதலில் பட்டிங் செய்தால் துபேவை பட்டிங் ஆட விட்டுவிட்டு பௌலிங்கின் போது அவருக்கு பதில் வேறொரு பௌலரை எடுத்துக்கொள்வார்கள். இங்கே துபேவின் இயல்பு என்ன என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். அவர் ஒரு ஓல்ரவுண்டர். பட்டிங்கும் ஆடுவார். மிதவேகமாக பந்தும் வீசுவார். இந்த விதிமுறையெல்லாம் இல்லாமல் அவர் ஓர் அணியின் லெவனில் இருந்தால் அவர் பட்டிங்கும் ஆடுவார். ஒன்றிரண்டு ஓவர்கள் பந்தும் வீசுவார். ஆனால், இப்போது இம்பாக்ட் ப்ளேயர் விதியின் கீழ் அப்படியில்லை. அவரின் பட்டிங் மட்டுமே சென்னைக்குப் போதுமானதாக இருக்கிறது. அவரின் பௌலிங்கிற்கு இங்கே வேலையே இல்லை. எனில், ஒரு ஆல்ரவுண்டர் இங்கே முழுமையான பட்டர் மட்டுமே என்கிற வகைக்குள் அடக்கப்படுகிறார். இதுதான் பிரச்சினை.

ஓல்ரவுண்டர்கள்தான் சர்வதேச கிரிக்கட்டின் பெரிய சுவாரஸ்யம். இவர்களை இந்த மாதிரியான விதிமுறைகள் மட்டுப்படுத்தி விடுமோ என்பதுதான் பலரின் கவலையாக இருக்கிறது. இந்திய அணியின் தற்போதைய கப்டனான ரோஹித் சர்மாகூட, கிரிக்கெட் 11 பேர் ஆடும் ஆட்டம்தான். 12 பேர் ஆடும் ஆட்டம் அல்ல. இந்த விளையாட்டின் முக்கிய அம்சத்தைப் பொழுதுபோக்குக்காகக் குலைப்பதில் விருப்பமில்லை. எனக்கு இந்த விதியின் மேல் உடன்பாடில்லை. சிவம் துபே, வாஷிங்டன் சுந்தர் போன்ற ஓல்ரவுண்டர்கள் அவர்களின் முழுத்திறனை வெளிப்படுத்த முடியாமல் ஒடுக்கப்படுகிறார்கள் எனக் கூறியிருக்கிறார்.

பொழுதுபோக்குக்காக கிரிக்கெட்டின் ஆதாரத்தை குலைப்பது தவறுதானே?




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தை பெற்றுக்கொள்ள விரும்பாத தென்கொரியப் பெண்கள்

உலகத்திலேயே மிகக்குறைந்த பிறப்பு விகிதம் கொண்ட நாடாக இருக்கிறது தென்கொரியா. ஆண்டுக்கு ஆண்டு இந்தப் பிரச்சினை தீவிரமடைந்துவருகிறது. காரணம், தென்கொரியப் பெண்கள் குழந்தை பெற்றுகொள்வதை விரும்புவதில்லை. ஏன் என்ற கேள்விக்கான பதில்தான், இந்தக் கட்டுரை.

தென்கொரியாவில் குழந்தை பிறப்பு விகிதம், முன் எப்பே.ாதும் இல்லாத அளவுக்குக் குறைந்துள்ளதாகப் புதிய புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. தென்கொரியப் பெண்கள், தங்களது பணி சார்ந்த வளர்ச்சியை மேம்படுத்திக்கொள்வதற்காகவும், தங்கள் நாட்டில் நிலவும் ஆணாதிக்கச் சூழலுக்கு எதிராகத் தங்களது குரலைப் பதிவு செய்யவும், தாங்கள் குழந்தை பெற்றுக்கொள்வதைத் தவிர்க்கும் முடிவை (Child Free) எடுப்பதாகக் கூறுகின்றனர்.


பொதுவாக, ஒரு நாட்டின் மக்கள் தொகை சீராக இருக்க, பிறப்பு விகிதம் (ஒரு பெண்ணுக்கு சராசரியாகப் பிறக்கும் குழந்தைகளின் எண்ணிக்கை) 2.1 ஆக இருக்க வேண்டியது அவசியம். கடந்த ஆண்டு தென்கொரியாவின் பிறப்பு விகிதம் 0.72 ஆகக் குறைந்துள்ளது. இது, 2022 ஆம் ஆண்டின் குழந்தை பிறப்பு விகிதமான 0.78 ஐ விடக் குறைவு.

2015 ஆம் ஆண்டிலிருந்து, அந்நாட்டில் தொடர்ந்து ஆண்டுதோறும் பிறப்பு விகிதம் குறைந்துவருகிறது. இந்நிலை இப்படியே நீடித்தால், 2100 ஆம் ஆண்டில் அந்நாட்டின் மக்கள் தொகை பாதியாக, அதாவது, சுமார் 26 மில்லியனாகக் குறைந்துவிடும் என்று எச்சரிக்கின்றனர் ஆய்வாளர்கள்.

தென்கொரியா, ஓர் ஆணாதிக்கச் சமூகம். அதிலிருந்து விடுபட நினைக்கும் பெண்களுக்கு, கல்வியும் வேலையுமே கலங்கரை விளக்குகள். ஆனால், அப்படி வேலைக்குச் செல்லும் பெண்களுக்கு, குடும்பப் பொறுப்புகள் அவர்களை முன்னேற விடாத சுமையாகப் பின்னிழுக்கின்றன. குறிப்பாக, குழந்தை வளர்ப்புப் பொறுப்புகள். இன்னொரு பக்கம், பேரன்டிங்கில் அந்நாட்டு ஆண்கள், பெண்களுக்கு உதவ முன்வருவதே இல்லை. குழந்தை, வேலை என நிற்க நேரமில்லாமல் ஓடும் வாழ்க்கை பெண்களுக்கு விரக்தியைத் தர; குழந்தை இல்லை என்றால் தங்களால் வேலையில் திறம்படச் செயல்பட முடியும் என்ற முடிவுக்குச் செல்கிறார்கள். வேலைக்குச் செல்லும் பெண்களில் 10இல் 6 பேர் குழந்தை வேண்டாம் என்ற முடிவுக்கு வருகின்றனர்.

கடந்த 20 வருடங்களாக, முந்தைய அரசுகள் இந்தப் பிரச்சினைக்காக அதிக பணத்தைச் செலவிட்டு, பிறப்பு விகித்தை உயர்த்த முயன்றன. குழந்தை பெற்றுக்கொள்ளும் திருமணமான தம்பதிகளுக்கு நிதி வழங்கும் நலத்திட்டங்கள், வசிப்பிடம் மற்றும் போக்குவரத்துக்கு மாதாந்திர மானியம், மருத்துவமனைக் கட்டணத்தில் சலுகை எனப் பணத்தை இறைத்தன. ஆனால், எல்லாம் செயலற்றுப்போயின.

"எங்களின் இந்த முடிவை மேலோட்டமாகப் பார்க்காமல், இதற்குப் பின்னால் இருக்கும் விடயங்களை உற்று நோக்கவேண்டியது அவசியம் என்கின்றனர் அந்நாட்டுப் பெண்கள். குழந்தை பிறப்பு சார்ந்த கொள்கைகள், பெண்களுக்கு ஆதரவாக இருக்கும்படியாக வடிவமைக்கப்பட்டிருந்தாலும், அவை நடைமுறைப்படுத்தப் படவில்லை. குழந்தை பெற்றுக்கொள்வது மற்றும் குழந்தை வளர்ப்பு சார்ந்த அனைத்து அம்சங்களும்



பெண்களின் தனிப்பட்ட பொறுப்பு என்று நம்பும் பரவலான கலாசாரமே அங்கே நிலவுகிறது. எனவே, குழந்தையைப் பெற்று, கணவரின் ஆதரவு இல்லாமல் வளர்ப்பது மிகவும் கடினமான ஒன்றாகப் போய்விடுகிறது' என்கிறார்கள் இந்தப் பெண்கள்.

இந்தக் கருத்தைத்தான் புள்ளிவிவரங்களும் உறுதிப்படுத்துகின்றன. எடுத்துக்காட்டாக, அந்நாட்டில் தாய், தந்தை ஆகிய இருவருக்குமே பெற்றோர் விடுப்பு (Parental leave) எனப்படும் குழந்தைப் பராமரிப்பு விடுமுறை, குழந்தைக்கு 8 வயதாகும் வரை அளிக்கப்படுகிறது என்றாலும், அம்மாக்கள்தான் அந்த விடுமுறையை அதிகம் பயன்படுத்துகின்றனர் என்று தரவுகள் தெரிவிக்கின்றன. உதாரணமாக, 2022 இல் 70% அம்மாக்கள் இந்த விடுமுறையைப் பயன்படுத்தியிருக்கும் சூழலில், அப்பாக்களைப் பொறுத்தவரை 7% பேரே பயன்படுத்தியுள்ளனர்.


இப்படி, குழந்தை வளர்ப்பு என்பது முழுக்க முழுக்க அம்மாக்கள் சார்ந்ததாக உள்ளதால், இளம்பெண்களைப் பணியமர்த்துவதில் நிறுவனங்கள் தயக்கம் காட்டுகின்றன. ஒரு புதிய பெண் ஊழியரை வேலைக்குத் தேர்வு செய்து, வேலை குறித்த பயிற்சியையும் கொடுத்துப் பணியாற்ற வைக்கும்போது, அப்பெண்ணுக்கு குழந்தை பிறந்துவிட்டால், விடுப்பு முடிந்து அப்பெண் பணிக்குத் திரும்பாமல் போய்விடுவதற்கான வாய்ப்புகள் அதிகம் இருப்பதாக நிறுவனங்கள் அஞ்சுகின்றன.

நிறுவனங்களின் இந்தத் தயக்கம், வேலை சார்ந்து முன்னேறத் துடிக்கும் பெண்களின் கனவுகளைச் சிதைத்துவிடுகிறது. இதுபோன்ற புறக்கணிப்புகள் தொடர்கதையாவதால், பெண்கள் குழந்தை பெற்றுக் கொள்வதைத் தவிர்த்து தாங்கள் சார்ந்திருக்கும் வேலையில் கவனம் செலுத்துகின்றனர்.

பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டுக்கான அமைப்பில் (OECD - Organisation for Economic Co-operation and Development) உறுப்பு நாடுகளாக உள்ள அமெரிக்கா, சுவீடன், பெல்ஜியம், தென்கொரியா, ஜேர்மனி, பிரான்ஸ், நெதர்லாந்து போன்ற நாடுகளில், மற்ற நாடுகளில் உள்ள 43.4% அப்பாக்கள் தங்கள் குழந்தைப் பராமரிப்பு விடுமுறையைப் பயன்படுத்தும் நிலையில், தென் கொரியாவில் வெறும் 1.3% அப்பாக்களே அதைப் பயன்படுத்துகின்றனர். இன்னொரு பக்கம், இந்த அமைப்பில் உள்ள உறுப்பு நாடுகளில், தென்கொரிய நாட்டுப் பெண்களே பெரும்பான்மையாக உயர்கல்வியை முடித்தவர்களாக இருக்கிறார்கள். ஆனால், பாலின ஊதியப் பாகுபாடு அங்குதான் மோசமாக இருக்கிறது என்பதுடன், பெண்கள் பணியில் இருந்து விடுபடும் எண்ணிக்கை, சராசரியைவிட அங்கு அதிகமாக இருக்கிறது.

கடந்த 50 வருடங்களாக, தென்கொரியாவின் பொருளாதாரம் வேகமாக வளர்ந்துவருகிறது. பெண்கள் உயர்கல்வி பெறுவதும், பல்துறைப் பணிகளில் பங்கேற்பதும் அதிகமாகியிருக்கிறது. அவர்களது இலக்குகள் விரிவடைந்துள்ளன. ஆனால், மனைவி, அம்மாவாக அவர்கள் ஏற்ற பொறுப்புகளைப் பகிர்ந்துகொள்ள அந்தச் சமூகம் தயாராக இல்லை. காலங்காலமாகத் தொடரும் ஆணாதிக்கக் கட்டமைப்புகளை ஓர் இரவில் மாற்றுவது சாத்தியமில்லை என்றாலும், இப்போது பெண்கள் ஒரு முடிவுக்கு வந்திருக்கிறார்கள்.

வொர்க் - லைஃப் பேலன்ஸ் என்பது பெண்களின் பிரச்சினை மட்டுமே இல்லை. இதை மற்ற நாடுகளும் கவனிக்க வேண்டியது முக்கியம்!



## அரிசி கழுவிய நீர்...

காஸ்மெட்டிங் உலகம், ஒரு பக்கம் அசுர வளர்ச்சி அடைந்தாலும் மறுபுறம் மக்கள் ஆர்கானிக் பொருட்களையே தேடி பயன்படுத்தி வருகின்றனர்.

வெளியில் செல்வதால் ஏற்படும் கருமையை நீக்க, செயற்கை முறையில் பல வழிகள் இருந்தாலும், மக்கள் ஆர்கானிக் பொருட்களையே பயன்படுத்த விரும்புகின்றனர் என்று தான் சொல்ல வேண்டும். அதில் குறிப்பாக ரைஸ் வாட்டர் ஸ்கின் கேர் அதாவது அரிசி கழுவிய நீர் பயன்படுத்துவது குறித்து இணையத்தில் வைரலாகி வருகிறது.

"ஜப்பான், சீனா போன்ற நாடுகளில் பல வருடங்களாக யூசுரு" என்ற பெயரில் அரிசி கழுவிய நீரை ஆரோக்கியத்திற்காகவும் அழகுக்காகவும் பயன்படுத்தி வருகின்றனர்.

அரிசியை ஓர் இரவு முழுவதும் தண்ணீரில் ஊறவைக்கும் போது பல நன்மை தரும் பற்றீறியாக்கள் அந்த நீரில் உண்டாகும். அதை சருமத்துக்குப் பயன்படுத்தும்போது முகம் பொலிவடையும் என்று பலரும் பயன்படுத்துகின்றனர்.

இது காலம் காலமாக இருந்தாலும், இப்போது உலகளவில் பிரபலமாகியுள்ளது.

கொரியன் அழகு மற்றும் "கண்ணாடித் தோலை" எவ்வாறு அடைவது என்பதில் ஆர்வம் அதிகரித்ததன் மூலம், அரிசி நீர் பலருக்கு அமுதமாக உருவெடுத்துள்ளது. ஆனால் அது உண்மையில் வேலை செய்கிறதா? என்பது குறித்து நிபுணர்கள் சொல்வதென்ன?

அரிசி நீரில் விற்றமின்கள், தாதுக்கள் மற்றும் அமினோ அமிலங்கள் நிரம்பியுள்ளது. இது தோல் மற்றும் முடி இரண்டிற்கும் ஒரு வரப்பிரசாதமாக அமைகிறது என்று நிபுணர்கள் கூறுகின்றனர்.

அரிசி நீரில் உள்ள அமினோ அமிலங்கள், முடிவேர்களை வலுப்படுத்தவும், அளவை அதிகரிக்கவும், முடி அமைப்பை சரிசெய்யவும் உதவுகிறது.

அதே சமயம் விற்றமின்கள் A, E மற்றும் தாதுக்கள் முடியின் தரத்திற்கு பங்களித்து, உதிர்தலை கட்டுப்படுத்தி முடி ஆரோக்கியத்தை பராமரிக்க உதவுகிறது.

அதே போல அரிசி நீர் முதுமையைத் தடுக்கும் நன்மைகளைக் கொண்டுள்ளது. இது தோல் வயதானதற்கு காரணமான எலாஸ்டேஸ் என்ற நொதியின் செயற்பாட்டையும் தடுக்கலாம். இதனால், அரிசி நீர் சருமத்தை பராமரிக்க உதவுகிறது.


ரைஸ் வாட்டர் டோனர்: ஒரு கொட்டன் துணியை அரிசி நீரில் நனைத்து, முகத்தைக் கழுவிய பின் டோனராகப் பயன்படுத்தவும்.

ரைஸ் வாட்டர் ஃபேஸ் மாஸ்க்: அரிசி மாவுடன் அரிசி நீரை கலந்து பேஸ்ட்டை உருவாக்கி, முகமூடியாகப் பயன்படுத்தவும்.

அரிசி தண்ணீரை உங்கள் முகத்தில் மசாஜ் செய்து, வெதுவெதுப்பான நீரில் கழுவுவதன் மூலம் மென்மையான முகத்தை பெறலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைக் கலசம்



## நேசத் துடிப்பு

மானுட வேட்டை வனத்துள் வேகமாய்
மறையத் துடிக்கிறது தாய் விலங்கு
குட்டிகளோ விரைவாயில்லை

கூட்டிலே பாம்பு குஞ்சுகளின் கீச்சிடல்
தவிக்கும் தாய்ப் பறவைப் போராட்டம்

தொங்கும் வீடு வியப்பு அழகு... தொடரும் மழை..
கூடிக் குலவும் தூக்கணாம் குருவிகள்

வானத்தில் வல்லூறு
இறைக்கைகளுள் குஞ்சுகள் அணைத்தபடி தாய்க்கோழி

அகோரக் கோடை வற்றும் குளம்
வலியும் தாய்மீன்

ஒரு பிடி உணவு கரையும் காகம்
நேசத்தில் ஒற்றுமை
கதறும் கன்று கயிற்றோடு போராடுகிறது பசு.

குழியுள் யானை அதை காக்கத் துடிக்கும்
அதன் இனம்

கன்றை விரட்டும் புலி அதை மிரட்டி எதிர்க்கும்
காட்டெருமை.

பட்டாம் பூச்சிகள் உலா தொட்டு விடாமல்
ரசிக்கிறது பச்சை மழலை

கவிந்த இருள் மின்மினிப் பூச்சிகள்
தீண்டாது தாண்டுகிறான் இருள் குடிசைச் சிறுவன்

சிதைந்த கிணற்றுள் விறைத்த நாய்
காப்பாற்ற துடிக்கும் புனிதன்

அன்று ஊன்றிய தென்னை விதை
தோப்பில் இளைப்பாறியபடி வயோதிபத் தாத்தா

மெல்லென நகரும் ஆறு அதற்கு குடைபிடிக்கும்
மருத விருட்சங்கள்

விரிந்த ஆலம்
நிலம் கிளையத் துடிக்கும் விழுதுகள்

வெட்ட, வெட்ட குறையும் மழை
ஆனாலும்... முளைக்கத் துடிக்கிறது விதைகள்

**சண் ஜீபத்**

## நல் எண்ணங்கள்

நல்ல எண்ணங்கள் நம்மை வளமாக்குமே
தீய எண்ணங்கள் தீங்கு விளைவிக்குமே
எண்ணங்கள் சிந்தனைகள் கல்வியை சீராக்குமே
ஆன்மீக சிந்தனைகள் ஒழுக்கம்மிக்க சமூகம் உருவாகுமே

கெட்ட சிந்தனைகள் கேடு விளைவிக்குமே
நல்லதை சிந்தித்தால் நோயின்றி வாழலாமே
எண்ணங்கள் தவறானால் தூக்கம் கலைந்திடுமே
வாழ்வை வளமாக்க கெட்ட எண்ணங்கள் களைதல் வேண்டுமே

சிந்திக்க தெரிந்தவன் சிறந்த விஞ்ஞானி ஆவானே
மாணவப்பருவம் நிம்மதி கெட்டுப் போகலாமா
கல்வியை நாளும் சிந்தித்தால் நல்ல பெறுபேறு கிடைக்குமே
கடவுள் சிந்தனைகள் ஆலயங்கள் தரிசித்திட வேண்டுமே

விளலுக்கு இறைத்த நீர் போல வீண் பொழுது போக்காதே
வீண்செலவு செய்து வெறுங்கை ஏய்ந்திடாதே
பாலைவனத்தில் படுத்துறங்க நினைக்காதே
நல்ல குடும்ப வாழ்வை கட்டித்தான் காத்திடுவாயே

மகிழ்ச்சியாக வாழ இத்தனையும் தேவையல்லவா!
தேயும் நிலவைப் போல் நெறி கெட்டு அலையாதே
ஆழம் அறியாமல் காலை வைத்தால் அடியோடு போயிடுவாயே
நல்ல எண்ணங்களை நாள்தோறும் நினைத்திடு

**எஸ்.பி.[illegible]**

## மௌனத்தின் தேடல்-713



### ஒற்றை விதை

ஆண்டாண்டு தோறும் அழுது புலம்பினாலும்
உன் புதல்வன் மீண்டு வரமாட்டான்
அவன் மண்ணுக்கு எருவாகி
காலங்கள் பல கடந்து விட்டன
எத்தனை வியாகுலங்கள்
எத்தனை மனக்கிலேசங்கள்
நீ விதைத்த ஒற்றை விதை
இன்னும் பல விதைகளை உருவாக்கும்

**சி.லவ்ரீன்,**
**ஏழாலை தெற்கு, மயிலங்காடு.**

### ஈழத்தமிழ்த் தாயே

ஈழத்தமிழ்த் தாயே
கிழக்கிலும் வடக்கிலும்
அழுது புலம்பும் தமிழ் தாய்மைகளின்
கூக்குரல் உன்னுடைய நெஞ்சத்தையும்
துடிக்கச் செய்கிறதா?
காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின்
கண்ணீருக்கு உரிய விலை என்ன?
அதற்குரிய தீர்வு மனிதப் புதைகுழியா?

**சி.லோட்டஸ்லோறெல்,**
(யா/யூனியன் கல்லூரி மாணவி)

### திராணியில்லை

எனக்கு கொள்ளியிடுவாயென
நான் உன்னை பெற்றேன்
பகைவன் உன்னை பறிக்க வந்தும் அவனோடு
மல்லுக்கட்டி உன்னை மீட்டெடுத்தேன்
ஆனால் எமனோடு மல்லுக்கட்ட எனக்கு
திராணியில்லாமல் போச்சு
கொடிய ஆட்கொல்லி கொரோனா! உனக்கு காலனானான்
பிரம்மனும் உன் இழப்பைக் கண்டு இரங்கல் கொண்டான்

**திருமதி ஜெனிஃபர் சிவரூபன்,**
**மயிலங்காடு.**

### அவர் இருந்த வரை

இளமை மாறி முதுமை அடைந்து
தலையும் நரைத்து உடலும் திரைந்து
கிழவி என்று பெயரும் பெற்று
ஏச்சும் பேச்சும் கேட்டு வாழ்ந்தாலும்
என் மனதில் மகிழ்ச்சி இருந்தது
இந்தக் கதிரையில்
அவர் இருந்த வரை

**பிரமா யதுர்சன்,**
**கொக்குவில் இந்துக் கல்லூரி.**

### பதியோடு இணைக்குமா விதி

பாசத்தின் பார்வை
பக்கம் இருந்தாலும்
பதி இல்லையே
என்ற ஏக்கம்
பதிக்குப் பதிலாக
அவரின் கதிரை
அவரோடு இணைப்பதற்கே
எனது தலை நரை

**துணவியூர் நடா.**

### இழக்கக் கூடாத சொத்து

செப்பிய பற்கள் சொறிந்து போய்
உப்பிய கன்னங்கள் உள்ளே போய்
சொத்து சுகங்கள்
தொலைந்து போனாலும்
முதுமையில் இழக்கக் கூடாத சொத்து
தன் வாழ்க்கைத் துணையே

**பி.மதுஷ்சனி,**
**தையிட்டி.**

### காத்திருப்பு!

யாருக்காக இந்த காத்திருப்பு! உன் மகனுக்காகத் தானே!
அவன் காணாமல் போகவில்லை! காணாமல் ஆக்கப்பட்டுள்ளான்!
இந்நாட்டின் எத்தர்களும் வீணர்களும் இருக்கும் வரை
அதிகமாக வாலை வயதினர் காணாமல் ஆக்கப்பட்டுக்
கொண்டேதான் இருப்பார்கள்
உன் மகன் எந்த புதைகுழியிலோ தன்னையும் தன்னுடைய
சாதனைகளையும் தன்னோடு சேர்த்து மண்ணுக்கு
தீனியாக்கி தியாகியாயிருப்பான்!

**இ.சிவஞானம், மயிலங்காடு.**

## மௌனத்தின் தேடல்- 714



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
மௌனத்தின் தேடல், வலம்புரி- சங்குநாதம்,
இல 191, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களம் பல கண்ட யாழ் கோட்டை



08 செங்கை ஆழியரான்

இவர்களைவிட 5 அடிமைச் சேவகர்கள் பணிவான வர, 2 கேடயக்காரர் ஒருவர் மாறி ஒருவர் ஒலிவேறா்வுக்குக் குடை பிடித்து வருவர். அவனது பவனியை முன்கூட்டியே அறிவிப்பன போன்று மூன்று தவிலடிப்போர் தமது மேளங்களைத் தட்டியவாறு நடப்பர். 1627 மார்ச் 22 ஆம் திகதி பிலிப் தே ஒலிவேறா தனது 23 ஆம் வயதில் மரணமடைந்தான். அவன் சடலம் அற்புதமாதா கோயிற் படிகளுக்கருகில் அடக்கம் செய்யப்பட்டது. அவனுக்குப் பின் யாழ்ப்பாத்தின் கப்பித்தான் மேஜராக லாங்றோட் தே செயிக்ஸாஸ் காபிறேரா என்பவன் பதவியேற்றான்.

### 1629 ஆம் ஆண்டு நடுக் கூறு

கண்டி இராச்சியத்தின் மன்னனாக விளங்கிய செனறத் என்பவன், போர்த்துக்கேயரை யாழ்ப்பாணத்திலிருந்து துரத்திவிட்டு, யாழ்ப்பாண அரசினைக் கைப்பற்றும் நோக்குடன் யாழ்ப்பாணக் கோட்டையை முற்றுகையிடுமாறு படையொன்றினை அனுப்பிவைத்தான்.

கண்டி அத்தப்பத்து முதலியாரின் தலைமையில் 10 ஆயிரம் வீரரைக் கொண்ட படையணி யாழ்ப்பாணம் நோக்கி வந்தது. அதற்குத வியாகத் தஞ்சாவூர் அரசனின் வடக்கர் படையொன்றும் யாழ்ப்பாணம் நோக்கி வந்து.

மணவினைத் தொடர்பால், யாழ்ப்பாணத்தின் ஆட்சியுரிமை தனக்குரியதென கண்டி மன்னன் செனரத் நம்பினான். பிலிப் தே ஒலிவேறா யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றி கடைசி மன்னன் சங்கிலியனைச் சிறைப்பிடித்துக் கோவாவுக்கு அனுப்பிவைத்தான். அரச குடும்பத்தைச் சேர்ந்த பலரைக் கத்தோலிக்காராகினான். மூன்று அரசகுமாரத்திகளில் ஒருத்தி, டொனா கதறினா என்ற ஞானஸ்தானப் பெயருடன் கத்தோலிக்க மதத்திற்கு மாற்றப்பட்டாள். வேறிரு அரசகுமாரிகளை சின்னமிகாப்பிள்ளை என்பான் தஞ்சாவூருக்கு அழைத்துச் சென்று அங்கு அடைக்கலம் பெற்றுக் கொடுத்தான்.

யாழ்ப்பாணத்தில் போர்த்துக்கேயரின் பொறுப்பிலிருந்த கதரீனா இளவரசியைத் தனது மகனுக்கு மணம் முடித்து வைக்குமாறு செனரத் மன்னன் தூதனுப்பி வைத்தான். பிலிப்தே ஒலிவேறா அவனது கோரிக்கையை மறுத்துவிட்டான். ஆனால் செனரத், தஞ்சாவூர் மன்னரிடம் அடைக்கலம் புகுந்திருந்த யாழ்ப்பாண த்து இளவரசிகள் இருவரையும் வரவழைத்துத் தன்னிரு மக்களுக்கும் மணம் முடித்துவைத்தான். எனவே யாழ்ப்பாண அரசாட்சி உரிமை தனக்கு உரியது என கண்டி மன்னன் அறை கூவி படை அனுப்பி வைத்தான்.

(தொடரும்...)

---

# கடல் புறா

## வணங்காத தலை! இணங்காத குரல்!




மாளிகை வாயிலுக்கு பலவர் மன் வந்ததுமே அவன் காலடியில் நிதிப் பெட்டிகளை இறக்க சொல்லி மாலுமிகளுக்கு கட்டளையிட இளையபல்லவன் பலவர்மன் முகத்தில் ஆரம்பத்தில் இருந்த குழப்பத்தையும் பிறகு நிலவிய மகிழ்ச்சி சாயலையையும் கடை கண்ணாலேயே கவனித்து உணர்ச்சிகளை அடக்கி கொள்வதில் பலவர்மனுக்கு இருந்த ஆற்றலைப் பற்றி உள்ளூர வியந்து கொண்டதன்றி அந்த ஆற்றல் வெளியே சொற்களின் மூலம் பிரதிபலிக்க இடம் கொடாமல், "உம்! திறவுங்கள் பெட்டிகளை" என்று தனது மாலுமிகளுக்கு உத்தரவு இட்டான்.

அவன் உத்தரவிட்டபடி சரேவெனப் பெட்டிகளின் மூடிகள் திறக்கப்பட்டதும் கூட்டத்திலே ஏற்பட்ட பெரும் மாறுதலையும் இளையபல்லவன் கவனிக்கவே செய்தனாகையால் எதிர்பார்த்து முடிந்துவிட்டது என்ற காரணத்தால் உள்ளே உவகையும் கொண்டான்.

மனிதர்களின் எண்ணங்களை எடை போடுவதில் நிகரற்ற வல்லமை படைத்த இளையபல்லவன். பணமென்றால் பிணமும் வாயைத் திறக்கும் என்ற தமிழ்ப் பழமொழி எத்தனை உண்மையானது என்பதை எண்ணி எண்ணி உள்ளுக்குள் சிரித்துக் கொண்டான்.

மூடிகள் திறக்கப்பட்ட ஆறு பெட்டிகளுக்குள்ளிருந்து மேல் நோக்கி விழித்த பெரும் செல்வத்தைக் கண்ட கொள்ளையர் கூட்டமும் நகர மக்கள் கும்பலும் நீண்ட நேரம் திகைத்தே நின்றனர்.

அவர்கள் ஆயுளில் கண்டிராத செல்வம், பல வகை நகைகள், பல வகை நவமணிகள், பலவகை நாணயங்கள், ஏதேதோ பண்டங்கள், பாத்திரங்கள் இவையனைத்தும் கண்ணுக்கு எதிரே மின்னியதும் பெரும் திறமையை அடைந்தது கூட்டம்.

விழித்த கண்கள் விழித்தபடி நின்றன. திறந்த வாய்கள் திறந்தபடி இருந்தன. கை கால்கள் கூட அசைவற்று [illegible] ஸ்தம்பித்து விட்டன. ஏதோ அணுகத்தகாத பெரும் புதையலைக் கண்டு பயப்படுபவர்கள் போல் அருகில் நின்ற கொள்ளையர்கள் கடைசியில் சற்றுப் பின்னும் அடைந்தனர்.

ஆறு பெட்டிகளில் ஒன்றில் தங்க நாணயங்களும் வெள்ளி நாணயங்களும் கலந்து வழிந்தன. இன்னொன்றில் வைர, கோமேதக, நீலவைடூரிய, மாணிக்கங்களும் அவை பதிக்கப்பட்ட பற்பல ஆபரணங்களும் நிரம்பி நின்றன.

மற்றொரு பெட்டியில் மன்னர் மாளிகையில் இருந்து கொண்டு வரப்பட்ட பற்பலவித தங்க வெள்ளிப் பாத்திரங்கள் காட்சி அளித்தன.

இன்னொரு பெட்டி பட்டுக்களாலும் பீதாம்பரங்களாலும் நானாவித வண்ணச் சேலைகளாலும் நிரம்பிக் கிடந்தன. கடைசி இரண்டு பெட்டிகளில் வாள்கள், குறுவாள்கள், கேடயங்கள் இவைதான் இருந்தன வென்றாலும் ஒவ்வொரு குருவாள் பிடியிலும் வாள்பிடியிலும் கேடயச் சக்கரங்களிலும் பதிக்கப்பட்டு இருந்த மணிகளும் செய்யப்பட்டிருந்த வேலைப்பாடுகளும் அவை ஒவ்வொன்றும் மன்னர்கள் அரண்மனையிலும் மந்திரிகள் படைத்தலைவர்கள் இல்லங்களிலும் இருக்க தக்கவை என்பது சந்தேக மரத் தெரிந்தது.

அந்தப் பெட்டிகள் தந்த காட்சியை கண்டு அதிர்ச்சியுற்று நின்றது எதிரே இருந்த கும்பல் மட்டுமல்ல அக்ஷயமுனைக் கோட்டை தலைவனான பலவர் மனும். அச்சமுற்று அவற்றை நோக்கினான். எதிரே வாயை பிளந்து கொண்டு நின்ற கொள்ளையரை மரக்கலங்களில் அனுப்பி பல நாட்களாக தான் கடலில் சம்பாதித்த கொள்ளை பொருட்களை விட பத்து மடங்கு அதிக மதிப்பு பெற்ற பெரும் செல்வம் தன் முன்னே விரிந்ததும் அச்சம் அவன் இதயத்தில் எழுந்ததற்கு காரணங்கள் இரண்டு இருந்தன. ஒன்று அபரமித செல்வம் தன்முனை எழுந்தது. இன்னொன்று அந்த செல்வத்தை கொள்ளையரும் மற்றோரும் கண்டதால் தன் திட்டத்தில் ஏற்பட்ட பெருந்தோல்வி. (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்


397

வலம்புரியின் மருத்துவச்சுடர்

# நீரிழிவின் தாக்கங்களை குறைக்க...

நமது நாட்டில் 20% ஆன வர்களுக்கு நீரிழிவு நோய் காணப் படுகின்றது. அதாவது, எழுமா றாக 500 பேரை எடுத்தால், அவர்களில் 100 பேருக்கு இந்த நோய் இருக்கிறது. நீரிழிவு நோய் பல்வேறு பிரச்சினைகளை ஏற்படுத்தும். இது, மூளை, சிறு நீரகம், இதயம், இரத்தக் குழாய் கள் ஆகியவற்றைப் பாதிக்கும். ஆகவே, நீரிழிவு வராமல் தடுக்க என்ன செய்ய வேண்டும் என்பது குறித்து நாம் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டியது அவசியம். இரத்தத்தில் குளுக்கோஸின் அளவு சாதாரண மட்டத்தை விட அதிகரிக்கும் நிலை நீரிழிவு எனப்படும். Glucose Bad எனும் ஆங்கில வார்த்தையின் ஒவ்வொரு எழுத்தும், நீரிழிவு உள்ளவர்கள் என்ன செய்ய வேண்டும் என சுட்டிக்காட்டு கின்றது. முதலாவது எழுத்தான G ஆனது Glycemic control ஐ சுட்டிக்காட்டுகிறது. அதாவது, இரத்தத்தில் உள்ள குளுக்கோ ஸின் அளவானது, சாதாரண மட்டத்தில் பேணப்படல் வேண் டும். சாப்பிட முன்னர் 110 mg/dl இற்குள்ளேயும், சாப்பிட்டு இரண்டு மணித்தியாலங்களின் பின்னர் 140 mg/dl இற்குள் ளேயும் காணப்பட வேண்டும். இரண்டாவது எழுத்தான L ஆனது Lipids ஐ குறிக்கிறது. அதாவது, Total cholesterol 200 mg/dl இற்குள்ளேயும், Triglycerides 150 mg/dl இற்கு ள்ளேயும், LDL (Bad cholesterol) ஆனது 100 mg/dlஇற்குள்ளேயும் காணப்பட வேண்டும். உடலில், Good cholesterol எனப்படும் HDL ஐ அதிகரிப்பது அவசியம். இதனை அதிகரிப்பதற்கு ஆரோக்கியமான உணவு முறை/ உணவு கட்டுப் பாடு, உடற்பயிற்சி எனும் இரு வழிமுறைகளை பின்பற்ற வேண்டும்.

மூன்றாவது எழுத்தான U ஆனது Urine micro albumin ஐ சுட்டிக்காட்டுகிறது. அதாவது, நீரிழிவு உள்ளவர்கள் தங்கள் சிறுநீரில் albumin வெளியே றுகிறதா என வருடத்தில் ஒன்று அல்லது இரண்டு தடவைகளா வது பரிசோதித்துப் பார்க்க வேண்டும். அப்படி சிறுநீரில் albumin வெளியேறுவது அதிகமாக இருந்தால் அதற்கு மேலதிக சிகிச்சை களை பெற்றுக் கொள்ள வேண்டும். நான்காவது எழுத்தான C ஆனது, Cigarette ஐ சுட்டிக்காட்டுகிறது. Cigarette பிடிப்பதை முற்றாக தவிர்க்க வேண்டும். அடுத்த எழுத் தான O ஆனது, Opthalmology ஐ குறிக்கி றது. நீரிழிவு உள்ளவர்கள் கண் பரி சோதனைகளை மேற் கொள்ள வேண் டும். அவர்களுக்கு விழித்திரையில் பல மாற்றங்கள் ஏற்படும். அதாவது, பார்வை இழப்பு, கண் அழுத்தம் அதிகரிப்பு, Glucoma நோய் போன்ற விளைவுகள் ஏற்படுகிறது. ஆகவே, நீரிழிவு உள்ளவர்கள் ஆறு மாதங் கள் அல்லது ஒரு வருடத்திற்கு ஒரு முறை கண் வைத்தியரிடம் சென்று, கண்களை பரிசோதிக்க வேண்டும். அடுத்த எழுத்தான S ஆனது Sexual dysfunction ஐ குறிக்கிறது. பொது வாக ஆண்களில் Impotence ஏற்படக்கூடும். இந்த Sexual dysfunction உள்ளவர்க ளுக்கு இதய நோய்கள் ஏற்படும் சந்தர்ப்பம் அதிகமாகும். எனவே, இதய நோய் கள் இருக்கிறதா என பரிசோதித்து, இல்லை என்று உறுதிப்படுத்திய பின்னர் Sexual dysfunction இற்கு சிகிச்சை களைப் பெற்றுக் கொள்ளலாம்.



அடுத்த எழுத்தான E ஆனது extremities ஐ குறிக்கிறது. அதா வது, நீரிழிவு உள்ளவர்கள், தங்க ளுக்கு கை, கால்களில் விறைப்புத் தன்மை மற்றும் நரம்பு பாதிப்பு இருக்கிறதா என பரிசோதித்துப் பார்க்க வேண்டும். அடுத்ததாக B ஆனது Blood pressure ஐ குறிக் கிறது. அதாவது, நீரிழிவு நோய் உள்ளவர்கள் தமது குருதி அழுக்கத்தை கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க வேண்டும். அடுத்த எழுத்தான A ஆனது, Alcohol ஐ குறிக்கிறது. குடிப்பதால் ஈரல் பாதிப்பு ஏற்படும். எனவே, இதனை தவிர்ப்பது சிறந் தது. இறுதியாக காணப்படும் D ஆனது, Dental check up மற்றும் Diet ஐ குறிக்கிறது. நீரிழிவு உள்ள வர்களுக்கு பல் மற்றும் முரசு பிரச்சி னைகள் ஏற்படும். எனவே, பல் வைத்தியரை சந்தித்து பரிசோத னைகளை மேற்கொள்ள வேண் டும். அதோடு, நீரிழிவு உள்ளவர்கள் உணவில் கவனம் எடுக்க வேண் டும். பொதுவாக பாலைத் தவிர மற்ற வெள்ளை நிறமான உணவு களை தவிர்க்க வேண்டும்.

எந்த நோயும் இல்லாமல் ஆரோக் கியமாக வாழ வேண்டும் எனில் குருதி அமுக்கம், குருதி குளுக் கோஸ் இனை கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க வேண்டும். உடற் பயிற்சி செய்ய வேண்டும். ஆரோக் கியமான உணவுகளை உண்ண வேண்டும், புகைத்தலைத் தவிர்க்க வேண்டும்,மற்றும் மற்றவர்களுடன் நன்றாக கதைத்து மகிழ்வாக இருக்க வேண்டும் என இறுதியாக செய் யப்பட்ட ஆய்வொன்றில் கூறப்பட்டுள் ளது. முக்கியமாக, சேவை மனப் பான்மையை கொண்டிருக்க வேண் டும். பல்வேறு நிறுவனங்களுடன் இணைந்து சேவை செய்யலாம். சேவை செய்வதால் நோய்களின் தாக்கம் குறைகிறது. எனவே, சேவை செய்யும்மனப்பான்மையை வளர்த்துக் கொள்ள வேண்டும். இவற்றுடன் Glucose Bad என்பதையும் மனதில் பதித்துக் கொண்டால் நீரிழிவு வருவதை தவிர்க்கவும் முடியும். வந்தால் அதன் சிக்கல் களை குறைத்துக் கொள்ளவும் முடியும்.

சிலர் மயங்கி விழுவார்கள் சிலர் Stroke வந்ததாக கூறுவார் கள். பெரும்பாலும், வயதான வர்களுக்கு Stroke வருவதற் கான காரணம் Dehydration ஆகும். உடலில் நீர் பற்றாக்கு றைவாக இருப்பதால் பல நோய் நிலைமைகள் ஏற்பட வாய்ப் புண்டு. எனவே, அதிகளவு நீர் அருந்துவதில் அனைவரும் கவ னம் செலுத்த வேண்டும். வய தானவர்களுக்கு தாகம் ஏற்படும் தன்மை குறைவாகும். எனவே அடிக்கடி நீர் அருந்துவதை வழக் கமாக கொள்ள வேண்டும். சிறு நீர் நிறமற்ற நிலையில் வெளி யேற வேண்டும். அவ்வாறு இல்லை என்றால், நீங்கள் அருந் தும் நீரின் அளவு குறைவாக இருக்கிறது என்று அர்த்தம். நீர் அருந்துவது குறைவாக இருந் தால், இரத்தம் கட்டிப்படக் கூடிய தன்மை அதிகரிக்கும். இதனால் Stroke, பாரிசவாதம் ஏற்படு வதற்கான வாய்ப்பு அதிகமாகும்.


ஆரோக்கியமான ஒருவருக்கு Stroke ஏற்பட காரணம் என்ன ? அதற்கான காரணம் மன அழு த்தம் ஆகும். மன அழுத்தத்தை குறைப்பதற்கு நாம் பழகிக் கொள்ள வேண்டும். போதும் என்று திருப்திப்படும் மனதோடு, கவலைப்படாமல் மகிழ்வாக வாழ்வது அவசியம். அதோடு, வயதானவர்கள் குளிக்கும் போது முதலில் தலைக்கு நீரை ஊற்று வதால், இரத்த குழாய்கள் சுரு ங்கி, Stroke ஏற்படுவதற்கான சந்தர்ப்பம் அதிகரிக்கும். ஆகவே, இதனை தவிர்ப்பது நல்லது. சிறுதூரப் பயணம் செல்லும் போது, வாகனங்களை விடுத்து நடந்து செல்வது நல்லது. இவ் வாறான சிறந்த வாழ்க்கை முறை களை கடைப்பிடித்து நீரிழிவு நோய் மற்றும் இதரநோய்களை யும் வென்று ஆரோக்கியமாக வும் மகிழ்வாகவும் வாழ்வோம்.

**Dr. T பேரானந்தராஜா,**
**பொது வைத்திய நிபுணர்,**
**போதனா வைத்தியசாலை,**
**யாழ்ப்பாணம்.**

**பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூக மேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (thamilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிழக்கு ஆபிரிக்காவில் கடும் வெள்ளம் நூற்றுக்கு மேற்பட்டோர் உயிரிழப்பு



(டோடோமா)

கிழக்கு ஆபிரிக்க நாடான தான்சானியாவில் நிலவி வரும் தொடர் கனமழை காரணமாக ஏற்பட்டுள்ள வெள்ளத்தில் சுமார் 155 பேர் பலியாகியுள்ளனரென செய்திகள் வெளியாகியுள்ளன.

பல வாரங்களாக பெய்த கனமழையால் ஏற்பட்டுள்ள வெள்ளம் மற்றும் நிலச் சரிவுகளில் 236 பேர் காயமடைந்துள்ளதுடன் அப் பகுதிகளில் பாரிய சேதம் ஏற்பட்டுள்ளதாக வெளி நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளனர்.

இதன்போது 200,000 இற்கும் அதிகமான மக்கள் மழையினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.


இந்நிலையில், அந் நாட்டு பாடசாலைகள் மூடப்பட்டுள்ளதுடன் வெள்ளத்தில் மூழ்கி பாதிக்கப் பட்டுள்ள மக்கள் அவசர சேவைகளினால் மீட்டு வரப்பட்டு வருகின்றனர்.

ஆபிரிக்க நாடுகளில் பொதுவாக காணப்படும் எல் நினோ காலநிலையில் தொடர் மழையால் ஏற்பட்டுள்ள மாற்றமே இத்தகைய பாதிப்புக்கு காரணம் என அந்நாட்டு பிரதமர் தெரிவித்துள்ளார்.

எல் நினோ என்பது இயற்கையாக நிகழும் கால நிலை வடிவமாகும். இது பொதுவாக உலகளவில் அதிகரித்த வெப்பம், அத்துடன் வறட்சி மற்றும் கன மழை ஆகியவற்றுடன் தொடர்புடையது.

இதன் காரணமாக, கடும் எல் நினோ மழை, பலத்த காற்று, வெள்ளம் மற்றும் பல்வேறு பகுதிகளில் நிலச்சரிவு ஆகியவை அதிகரித்து கணிசமான சேதம் ஏற்பட்டுள்ளதென தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-6)

## ரஷ்யாவிற்கு ஆதரவளிப்பதை நிறுத்துங்கள் சீனாவுக்கு அமெரிக்கா எச்சரிக்கை



(வோஷிங்டன்)

உக்ரைன் மோதலில் ரஷ்யாவுக்கு ஆதரவளிப்பதை நிறுத்தாவிட்டால் சீனா மீது நடவடிக்கை எடுக்கப்படும் என அமெரிக்க வெளியுறவு செயலர் ஆண்டனி பிளின்கன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

பனிப்போருக்குப் பின்னர் இந்த ஒத்துழைப்பு ஐரோப்பிய பாதுகாப்புக்கு மிகப் பெரிய அச்சுறுத்தலாக இருப்பதாக அவர் கூறியதாக வெளிநாட்டு செய்திகள் குறிப்பிடுகின்றன.

அமெரிக்கா என்ன நடவடிக்கை எடுக்க தயாராக உள்ளது என்பதை அவர் தெரிவிக்கவில்லை.

இஸ்ரேலுடனான மோதலை மேலும் அதிகரிப்பதற்கு எதிராக ஈரானுடனான தனது உறவை சீனா பயன்படுத்துகிறது என்று அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் ஆண்டனி பிளிங்கன் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை வோஷிங்டனுக்கும் பீஜிங்கிற்கும் இடையிலான உறவுகள் தாய்வான் மற்றும் தென் சீனக் கடல் மீதான சீனாவின் உரிமை கோரல்களாலும் மேம்பட்ட தொழில்நுட்பத்தின் மீதான அமெரிக்க ஏற்றுமதி தடைகளாலும் சிதைந்துள்ளன.

கடந்த பெப்ரவரி மாதம் உளவு பலூன்தொடர்பாக ஏற்பட்ட தகராறில் அவை மேலும் பாதிப்பை உருவாக்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## இன்று ஒரு தகவல் 108



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## உணவுப் பாதையில் வெப்பநிலை

ஆக்கப் பொறுத்தவர்கள் ஆளப் பொறுக்கக் கூடாதா என்று கேட்பார்கள். அப்படி ஒரு பழமொழி இருக்கிறது. நம்மில் ஆறப் பொறுக்காதவர்கள் பல பேர் உண்டு. சூடாவே எல்லாவற்றையும் முழுங்கிறவர்கள் தான் இவர்கள். சுடாக தேநீரை கொண்டு வந்து அவர்கள் முன்னால் வைத்துப் பாருங்கள். அடுத்தவர்கள் யாரும் அதை எடுத்துக் கொள்ளுவார்களோ என்று அவசரப்படுகின்ற மாதிரி இவர்கள் அதை டபக் என்று எடுத்து லபக் என்று முழுங்கி விடுவார்கள்.

இப்படி சூடா சாப்பிடுவது வயிற்றுக்கு கெடுதல். கொதிக்க கொதிக்க ஒருதர் ஒரு கப் தேநீரை அவசர அவசரமாக முழுங்குறார் என்று வைத்து கொள்ளுங்கள்.அப்போது அவர் குடல் படாத பாடுபடுகிறது. முக்கியமாக அந்த உணவுக்குழல் இருக்கிறதே அது சூடு தாங்காமல் துடிதுடிக்கிறது. உணவுக்குழலோட மேற்பகுதி இருக்கிறதே அது சில வினாடிக்குள்ளே கிட்டத்தட்ட 60 டிகிரி செல்சியஸ் வெப்பநிலைக்கு வந்து விடுகிறது. அதாவது ரெண்டு மடங்கு வெப்பநிலை வந்து விடுகிறது.

அதே மாதிரி ஐஸ்கிறீம் சாப்பிடும் போதும் அது உணவுக்குழலை கிட்டத்தட்ட உறைய வைத்து விடுகிறது. மறுபடியும் அந்த உணவுக்குழல் பழைய நிலைக்கு வருவதற்கு கொஞ்ச நேரம் ஆகிறது.இதனாலே வெறும் குடலும் கெட்டு பெப்ஸ்டிக் அல்சரும் வேறு பல வயிற்றுக் கோளாறுகளும் ஏற்படுவதற்கு வழி ஏற்படுகிறது.

இதே மாதிரி ரொம்ப சூடான மற்றும் குளிரான உணவை சாப்பிடும் போது உணவுப் பாதையின் வெவ்வேறு இடங்களிலே வெப்பநிலை எந்த அளவிற்கு இருக்கு என்பதை தெரிந்து கொள்வதற்கு ஒரு உக்தியை கண்டு பிடித்து இருக்கிறார்கள்.

பிரிட்டனிலே ஒரு விஞ்ஞானக் குழு இந்த உக்தியை உருவாக்கி இருக்கிறார்கள். ஒரு மெல்லிய குழாய் அதில் ஆறு மிக நுண்ணிய வெப்ப மின்னிரட்டை வெப்பமானிகள் பொருத்தி இருப்பார்கள். இந்த குழாயை நோயாளியோட தொண்டை வழியாக வயிற்றுக்குள்ளே செலுத்துவது. அது உள்ளே போய் ஜீரணப்பாதையிலே பல்வேறு இடங்களிலே உள்ள வெப்பநிலையை ரொம்ப துல்லியமாக காட்டுகிறது.

சரி இதை தெரிந்து கொண்டு என்ன ஆகப் போகிறது என்று கேட்கிறீர்களா? ரொம்ப சூடாக மற்றும் குளிரான உணவுகளையும் உள்ளே தள்ளும் போதே அது வயிற்றுக்குள்ளே போய் பெப்டிக் அல்சரையும் வேறு சில ஜீரணக் கோளாறுகளையும் உண்டாக்குகின்றது. அது எப்படி என்பது இது மூலமாக புரிந்துக் கொள்ள முடியும். அதைப் புரிந்து கொண்டால் சிகிச்சை செய்வதும் சுலபமாக இருக்கும்.

செரிமானப் பாதையிலே வெவ்வேறு இடங்களிலே உள்ள வெப்ப நிலையைக் கண்டுபிடிப்பதற்கு ரொம்ப நாளாக பல விதமான உத்திகளை கையாண்டு கொண்டு வருகின்றார்கள்.

போன நூற்றாண்டுகளில் ஒரு ஆராய்ச்சியாளர் இருந்தார். அவர் ஒரு வித்தைக்காரரிடம் பேச்சு கொடுத்து அவரை மெதுவாக மசிய வைத்து அழைத்துக் கொண்டு வந்தார். அவர் எப்படி என்றால் ஒரு பெரிய பட்டாக்கத்தியையே முழுங்கி அப்புறம் வெளியே அதை எடுத்துக் காட்டும் வித்தைக்காரன். அப்போது எல்லாம் இது மாதிரி வித்தைகள் அதிகம்.

இவருடைய ஆராய்ச்சிக்கு அது மாதிரி ஆள்தானே தேவை. அதனாலே அவர் கொண்டு வந்தார். ஒரு நீளமான வெப்பநிலைமானியை கொடுத்து முழுங்கச் சொன்னார். கத்தியையே முழுங்குறவருக்கு இதை முழுங்குவது கஷ்டமாவா இருக்கும்? அவருக்கு இது அல்வா துண்டு சாப்பிடுகின்ற மாதிரி!

அவர் வயிற்றிலே வெப்பநிலை மானியை செலுத்தி வயிற்றிலே உள்ள வெப்பநிலையை தெரிந்து கொண்டார். இப்போது எல்லாம் அதுமாதிரி வயிற்றுப் பிழைப்புக்காகவோ பொழுது போக்கிற்காகவோ பட்டாக்கத்திகளை முழுங்கிக் காட்டும் வித்தைக்காரர்கள் கிடைப்பது ரொம்ப கஷ்டமாக இருக்கும். பிரிட்டனிலே.

அதனாலே வேற விதமான உக்திகளை கண்டுபிடிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டு விட்டது. இப்போது கண்டு பிடிப்பதற்கு கம்யூட்டர் சம்பந்தப்பட்டு அதனாலே துல்லியமாக கணக்கெடுக்க முடிகிறது.

விஞ்ஞானிகள் கணக்கெடுப்பது ஒரு பக்கம் இருக்கட்டும். இதுலே நாம தெரிந்து கொள்ள வேண்டியது என்ன என்றால். எந்த ஆகாரத்தையும் அதிக சூடாகவோ அதிக குளிர்ச்சியாகவோ சாப்பிடக்கூடாது. அபூர்வமாக சில பேருக்கு உடம்பு ஒத்துக்கும்.

அதனாலே அப்படி சாப்பிட்டாலும் ஒன்றும் செய்யாது. அதற்காக எல்லோரும் அதே வழியிலே போக முடியாது.

வித்தை காட்டுகின்றவர்களுக்கு வெளியூரிலே வேணும் என்றால் பஞ்சம் இருக்கலாம். நமது ஊரிலே அப்படி இல்லை. இப்போதும் நிறைய வித்தை காட்டுகின்றவர்கள் இருக்கின்றார்கள். பாம்பை முழுங்குகின்றவர்கள். பிளேடை முழுங்குகின்றவர்கள் இப்படி!

அப்படிப்பட்ட நண்பர் ஒருத்தர் இருக்கின்றார். அவர் எப்படி என்றால் ரூபா நோட்டையே முழுங்குவார். அப்புறம் வெளியே எடுத்துக் காட்டுவார்.

எனனுடைய வயிற்றிலே ஒரு வங்கியே இருக்கும் பார். ஒரு பத்து ரூபாய் கொடுங்கள் என்றார். கொடுத்தேன். அதை வாங்கி வாயிலே போட்டு முழுங்கினார். கொஞ்ச நேரத்திலே வெளியே எடுத்தார். பார்த்தால் 11 ரூபாய் இருந்தது.

ஒரு ரூபாய் அதிகமாக இருக்கு என்றேன்.

நான் சொல்லவில்லை வயிற்றிலே வங்கி இருக்கு என்று அது தான் வட்டியோடு வந்துள்ளது என்று சொல்லி அதை என்னிடம் கொடுத்து விட்டார்.

இன்னொரு தடவை அப்படி கேட்டார். நான் நூறு ரூபாய் தாளை கொடுத்தேன். வட்டி அதிகமாக வரும் ஆசையிலே

அதை வாங்கி முழுங்கினார். கொஞ்ச நேரம் ஆகி விட்டது. ஒன்றும் வரவில்லை. என்னங்க இது ஒன்றையும் காணவில்லை என்றேன்.

அது மெதுவாக வேறு ஒன்றுமில்லை. இதை நிலையான வைப்பில் போட்டு விட்டேன் ஐந்து வருடம் கழித்து தான் வெளியே வரும் என்று சொல்லி விட்டு புறப்பட்டு போய் விட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஜயதாஸவை நீக்குங்கள் மொட்டு மீண்டும் கோரிக்கை

(கொழும்பு)



நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவை அமைச்சரவையில் இருந்து நீக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி மீண்டும் கோரிக்கை விடுத்துள்ளது எனத் தெரியவருகின்றது.

எதிரணி அரசியல் நடத்துகின்றோம் எனக் கூறும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து செயற்படுவதாலும், அக்கட்சியில் பதவியை ஏற்றதாலும் அவரை அமைச்சரவையில் இருந்து நீக்க வேண்டும் எனக் கோரப்பட்டுள்ளது.

விஜயதாஸவுக்குப் பதிலாக அமைச்சரவைக்குள் தம்மிக்க பெரேராவை உள்வாங்குமாறும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது எனத் தெரியவருகின்றது.

இந்தக் கோரிக்கையை ஏற்று ஜனாதிபதி அமைச்சரவையை மறுசீரமைத்தால் நீதி அமைச்சு பதவி சுசில் பிரேமஜயந்தவுக்கும், கல்வி அமைச்சு தம்மிக்க பெரேராவுக்கும் வழங்கபடக் கூடும் என அறியமுடிகின்றது. (நி-6)

# இந்திய உயர்ஸ்தானிகர்- பசில் திடீர் சந்திப்பு தென்னிலங்கையில் சூடுபிடிக்கும் அரசியல் களம்

(கொழும்பு)



இலங்கையில் எதிர்வரும் ஜனாதிபதித்தேர்தலை எதிர்கொள்ள பிரதான கட்சிகள் தயாராகி வரும் நிலையில் இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஸ் ஜா, பொதுஜன பெரமுனவின் முக்கியஸ்தரான பசில் ராஜபக்ஷவை சந்தித்து கலந்துரையாடியுள்ளார். இச் சந்திப்பு நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்றுள்ளது. இச்சந்திப்பு தொடர்பில் இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் எக்ஸ் தளத்தில் வெளியிடப்பட்ட பதிவில் .

இலங்கையின் அரசியல் முன்னேற்றங்கள் உட்பட பரஸ்பர ஆர்வமுள்ள தலைப்புகளில் சுமுகமான விவாதங்கள் தொடர்பிலும் இச் சந்திப்பில் கவனம் செலுத்தப்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-6)

## சாவகச்சேரி நகராட்சி மன்றம் ஆதனப் பெயர் மாற்றம்

சாவகச்சேரி நகராட்சி மன்றத்திற்குட்பட்ட வட்டாரம் - 09. தனங்களப்பு வீதி. 80/1 என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட K.சிவசம்பு என்னும் பெயரில் ஆதன வரிப்பதிவேட்டில் காணப்படுகிறது. இவ் ஆதனத்தில் இருந்து பிரிந்த ஒரு பகுதிக்கு பெயர்மாற்றம் செய்வதற்கு தற்போது வேலுப்பிள்ளை இராமநாதன் விண்ணப்பம் சமர்ப்பித்துள்ளார்.

விண்ணப்பதாரியினால் சமர்ப்பிக்கப்பட்ட ஆரம்ப உறுதியின் பிரகாரம் குறித்த ஆதனத்தினை மட்டுவில் தெற்கு வயிரவன் கந்தனும் பெண் நாகியும் குறித்த ஆதனமானது வயிரவன் கந்தனுக்கு 1942 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 20 ஆம் திகதி நொத்தாரிசு வ.சபாரத்தினம் முன்னிலையில் நிறைவேறிய 17893 ஆம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட அறுதி உறுதிமூலம் வந்தடைந்தது என்று வெளிப்படுத்தி தற்போது அவர்கள் பிள்ளைகளாகிய கந்தன் மகள் மீனாட்சிக்கும் கந்தன் மகள் பத்மினிக்கும் 1948 ஆம் ஆண்டு மாசி மாதம் 5 ஆம் திகதி நிறைவேறிய 151 ஆம் இலக்க நன்கொடை உறுதி மூலம் நன்கொடை வழங்கியுள்ளனர்.

பின்னர் 1963.07.09 ஆம் திகதியில் 13130 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய நன்கொடை உறுதி மூலம் வயிரவன் கந்தனும் பெண் நாகியாலும் அவர்கள் மகள் கந்தன் மகள் மீனாட்சிக்கு வழங்கப்பட்டுள்ளது.

பின்பு கந்தன் மகள் மீனாட்சியால் பிரசித்த நொத்தாரிசு செ.அம்பிகைபானன் முகதாவில். 18.07.1984 ஆம் ஆண்டு 1715 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் கார்த்திகேசு மகள் உதயகுமாரிக்கும். அதே நொத்தாரிசு முகதாவில். 18.07.1984 ஆம் ஆண்டு 1716 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் கார்த்திகேசு மகள் வசந்த குமாரிக்கும். அதே நொத்தாரிசு முகதாவில். 18.07.1984 ஆம் ஆண்டு 1717 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் கார்த்திகேசு மகள் இந்திரகுமாரிக்கும் சென்றடைந்தது.

பின்பு சின்னையா கார்த்திகேசு மகள் உதயகுமாரி பிரசித்த நொத்தாரிசு நிமலினி கதிரேசு முகதாவில் 17.11.1984 ஆம் ஆண்டு 745 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய நன்கொடை உறுதி மூலம் சின்னையா கார்த்திகேசு மகள் இந்திரகுமாரிக்கு வழங்கியுள்ளார்.

பின்பு இராசதோப்பு வளவு. சாவகச்சேரி தற்காலம். No.445, Victory BLVD, Staten Island, New York, The United States of America இம்மானுவல் எட்வேர்ட் கிறிஸ்றலொக் பெண் இந்திரகுமாரி (கார்த்திகேசு மகள்) தனது கணவன் இம்மானுவல் எட்வேர்ட் கிறிஸ்றலொக் இன் பூரண சம்மதத்துடனும் இராசதோப்பு வளவு. சாவகச்சேரி தற்காலம். No.06. Saint Dennis Road in the City of Brambton, in the Province of Ontario, Canada இராஜரட்ணம் பாலகுமாரன் பெண் வசந்தகுமாரி (கார்த்திகேசு மகள்) தனது கணவன் இராஜரட்ணம் பாலகுமாரன் இன் பூரண சம்மதத்துடனும் தமது அற்றோனிதத்துவக்காரர் பெருங்குளம் சங்கத்தானை வீதி. சாவகச்சேரி சதாசிவம் சத்துருசங்காரம் மூலம் தொழிற்பட்டு சட்டத்தரணியும் பிரசித்தநொத்தாரிசும் கேசவன் சஜந்தன் மூலம் 2022.10.05 இல் நிறைவேறிய 70 ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் பொற்றொழிலாளர் வீதி. சங்கத்தானை. சாவகச்சேரி வேலுப்பிள்ளை இராமநாதன் (தே.அ.அ.இல 551842029V) இற்கு சென்றடைந்துள்ளது.

ஆதன அட்டவணை

வடமாகாணம். யாழ்ப்பாணம் மாவட்டம். தென்மராட்சிப்பகுதி. சாவகச்சேரி கோயிற்பற்று. சாவகச்சேரி நகரசபை ஆட்சி அதிகார எல்லைக்குள். தென்மராட்சி பிரதேச செயலாளர் பிரிவில் சாவகச்சேரி நகர் (J/300) கிராம அலுவலர் பிரிவு. தனங்களப்பு வீதி சாவகச்சேரி இறை "கடற்கரைக்கிராய் வயல்" நிலப்பரப்பு ஆறு குளி இரண்டு தசம் ஐந்து (நில.பர: 06 குளி 2.5) இதில் உத்தரவு பெற்ற நில அளவையாளர் மு.சிவஷனசுந்தரம் அவர்களால் 1984.07.18 ஆம் திகதி நில அளவை செய்யப்பட்டு தயாரிக்கப்பட்ட இலக்கம் 510 உடைய படத்தில் துண்டு 1 எனச் சுட்டப்பட்ட "கடற்கரைக்கிராய்வயல்" நிலப்பரப்பு இரண்டு (நி.ப. 02) (பதிவு கு 596/89) மற்றும் துண்டு 2 என சுட்டப்பட்ட "கடற்கரைக்கிராய் வயல்" நிலப்பரப்பு இரண்டு (நி.ப.02) (பதிவு கு 596/88) மற்றும் துண்டு 3 என சுட்டப்பட்ட "கடற்கரைக்கிராய் வயல்" நிலப்பரப்பு இரண்டு (நி.ப. 02) (பதிவு கு 596/87) மேற்படி மூன்று பிரிவுகளும் தற்போது மீண்டும் இணைந்து நிலப்பரப்பு ஆறு (நி.ப.6) ஆனால் இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் வல்லிபுரம் சிவராசா அவர்களால் 2022.10.22 ஆம் திகதி நில அளவவை செய்யப்பட்டு தயாரிக்கப்பட்ட இலக்கம் 8761 உடைய படத்தில் துண்டு 1 மற்றும் துண்டு 2 என சுட்டப்பட்ட நிலப்பரப்பு ஆறு குளி இரண்டு தசம் ஐந்து (நி.ப.6 குளி 2.5) உடைய ஆதனம் இதில் மேற்படி இலக்கம் 8761 உடைய படத்தில் தெற்குப் பக்கமாக துண்டு 2 என சுட்டப்பட்ட நிலப்பரப்பு இரண்டு குளி பதின்னான்கு தசம் ஐந்து ஐந்து (நி.ப.2 குளி 14.55) உடைய ஆதனம் இதற்கு எல்லை கிழக்கு: சாவகச்சேரி தனங்களப்பு வீதி. வடக்கு: மேற்படி இலக்கம் 8761 உடைய படத்தில் துண்டு 1 என சுட்டப்பட்ட இதன் மிகுதி ஆதனம். மேற்கு: சாவகச்சேரி நகரசபை விளையாட்டு மைதானம்.தெற்கு: கந்தன் மகள் மீனாச்சியின் ஆதனம். இவ்வெல்லை காணியடங்கலும் அதைச்சேர்ந்தவைகளனைத்தும்.

தற்போது வேலுப்பிள்ளை இராமநாதன் இவ்வாதனத்தை தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளனர். எனவே இவ்வாதனம் தொடர்பாக ஏதாவது ஆட்சேபனை தெரிவிக்க இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த நாளிலிருந்து 30 நாட்களுக்குள் நேரடியாகவோ தபாலிலோ சட்டபூர்வ ஆவணங்களுடன் எழுத்து மூலம் தெரிவிக்க முடியும். வெளிநாடுகளில் வசிப்பவர்களானால் இங்குள்ள உறவினர்களூடாக தெரிவிக்கலாம். ஆட்சேபனை எதுவும் தெரிவிக்காத பட்சத்தில் மேற்குறித்த ஆதன உரிமையாளரது பெயருக்குப் பதிலாக விண்ணப்பதாரரின் பெயரை உட்புகுத்த நடவடிக்கை மேற்கொள்ளப் படும். இவ்வுட்புகுத்தல் தொடர்பாக ஏற்படும் எவ்வித பிரச்சனைகளுக்கும் நகராட்சி மன்றம் பொறுப்பாளி அல்ல என்பதனைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (584)

செயலாளர், நகராட்சிமன்றம், சாவகச்சேரி.

## சாவகச்சேரி நகராட்சி மன்றம் ஆதனப் பெயர் மாற்றம்

சாவகச்சேரி நகராட்சி மன்றத்திற்குட்பட்ட வட்டாரம் - 09. தனங்களப்பு வீதி. 80/1 என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் K.சிவசம்பு என்னும் பெயரில் ஆதனவரிப் பதிவேட்டில் காணப்படுகிறது. இவ் ஆதனத்தில் இருந்து பிரிந்த ஒரு பகுதிக்கு பெயர்மாற்றம் செய்வதற்கு தற்போது றொசாந் பெண் லக்சனா விண்ணப்பம் சமர்ப்பித்துள்ளார்.

விண்ணப்பதாரியினால் சமர்ப்பிக்கப்பட்ட ஆரம்ப உறுதியின் பிரகாரம் குறித்த ஆதனத்தினை மட்டுவில் தெற்கு வயிரவன் கந்தனும் பெண் நாகியும் குறித்த ஆதனமானது வயிரவன் கந்தனுக்கு 1942 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 20 ஆம் திகதி நொத்தாரிசு வ.சபாரத்தினம் முன்னிலையில் நிறைவேறிய 17893 ஆம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட அறுதி உறுதிமூலம் வந்தடைந்தது என்று வெளிப்படுத்தி தற்போது அவர்கள் பிள்ளைகளாகிய கந்தன் மகள் மீனாட்சிக்கும் கந்தன் மகள் பத்மினிக்கும் 1948 ஆம் ஆண்டு மாசி மாதம் 5 ஆம் திகதி நிறைவேறிய 151 ஆம் இலக்க நன்கொடை உறுதி மூலம் நன்கொடை வழங்கியுள்ளனர்.

பின்னர் 1963.07.09 ஆம் திகதியில் 13130 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய நன்கொடை உறுதி மூலம் வயிரவன் கந்தனும் பெண் நாகியாலும் அவர்கள் மகள் கந்தன் மகள் மீனாட்சிக்கு வழங்கப்பட்டுள்ளது.

பின்பு கந்தன் மகள் மீனாட்சியால் பிரசித்த நொத்தாரிசு செ.அம்பிகைபானன் முகதாவில். 18.07.1984 ஆம் ஆண்டு 1715 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் கார்த்திகேசு மகள் உதயகுமாரிக்கும். அதே நொத்தாரிசு முகதாவில். 18.07.1984 ஆம் ஆண்டு 1716 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் கார்த்திகேசு மகள் வசந்த குமாரிக்கும். அதே நொத்தாரிசு முகதாவில். 18.07.1984 ஆம் ஆண்டு 1717 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் கார்த்திகேசு மகள் இந்திரகுமாரிக்கும் சென்றடைந்தது.

பின்பு சின்னையா கார்த்திகேசு மகள் உதயகுமாரி பிரசித்த நொத்தாரிசு நிமலினி கதிரேசு முகதாவில் 17.11.1984 ஆம் ஆண்டு 745 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய நன்கொடை உறுதி மூலம் சின்னையா கார்த்திகேசு மகள் இந்திரகுமாரிக்கு வழங்கியுள்ளார்.

பின்பு இராச தோப்பு வளவு சாவகச்சேரி தற்காலம். No.445. Victory BLVD, Staten Island, NewYork, The United States of America இம்மானுவல் எட்வேர்ட் கிறிஸ்றலொக் பெண் இந்திரகுமாரி (கார்த்திகேசு மகள்) தனது கணவன் இம்மானுவல் எட்வேர்ட் கிறிஸ்றலொக் இன் பூரண சம்மதத்துடனும் இராச தோப்பு வளவு சாவகச்சேரி தற்காலம். No.06,Saint Dennis Road in the City of Brambton, in the Province of Ontario, Canada இராஜரட்ணம் பாலகுமாரன் பெண் வசந்தகுமாரி (கார்த்திகேசு மகள்) தனது கணவன் இராஜரட்ணம் பாலகுமாரன் இன் பூரண சம்மதத்துடனும் தமது அற்றோனிதத்துவக்காரர் பெருங்குளம் சங்கத்தானை வீதி. சாவகச்சேரி சதாசிவம் சத்துருசங்காரம் மூலம் தொழிற்பட்டு சட்டத்தரணியும் பிரசித்தநொத்தாரிசும் கேசவன் சஜந்தன் மூலம் 2022.10.05 இல் நிறைவேறிய 69 ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் பொற்றொழிலாளர் வீதி. சங்கத்தானை. சாவகச்சேரி றொசாந் பெண் லக்சனா (தே.அ.அ.இல 947672592V) இற்கு சென்றடைந்துள்ளது.

ஆதன அட்டவணை

வடமாகாணம். யாழ்ப்பாணம் மாவட்டம். தென்மராட்சிப்பகுதி. சாவகச்சேரி கோயிற்பற்று. சாவகச்சேரி நகரசபை ஆட்சி அதிகார எல்லைக்குள். தென்மராட்சி பிரதேச செயலாளர் பிரிவில் சாவகச்சேரி நகர் (J/300) கிராம அலுவலர் பிரிவு. தனங்களப்பு வீதி சாவகச்சேரி இறை "கடற்கரைக்கிராய் வயல்"நிலப்பரப்பு ஆறு குளி இரண்டு தசம் ஐந்து (நில.பர: 06 குளி 2.5) இதில் உத்தரவு பெற்ற நில அளவையாளர் மு.சிவஷனசுந்தரம் அவர்களால் 1984.07.18 ஆம் திகதி நில அளவை செய்யப்பட்டு தயாரிக்கப்பட்ட இலக்கம் 510 உடைய படத்தில் துண்டு 1 எனச் சுட்டப்பட்ட "கடற்கரைக்கிராய்வயல்" நிலப்பரப்பு இரண்டு (நி.ப. 02) (பதிவு கு 596/89) மற்றும் துண்டு 2 என சுட்டப்பட்ட "கடற்கரைக்கிராய் வயல்" நிலப்பரப்பு இரண்டு (நி.ப. 02) (பதிவு கு 596/88) மற்றும் துண்டு 3 என சுட்டப்பட்ட "கடற்கரைக்கிராய் வயல்" நிலப்பரப்பு இரண்டு (நி.ப.02) (பதிவு கு 596/87) மேற்படி மூன்று பிரிவுகளும் தற்போது மீண்டும் இணைந்து நிலப்பரப்பு ஆறு (நி.ப.6) ஆனால் இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் வல்லிபுரம் சிவராசா அவர்களால் 2022.10.22 ஆம் திகதி நில அளவவை செய்யப்பட்டு தயாரிக்கப்பட்ட இலக்கம் 8761 உடைய படத்தில் துண்டு 1 மற்றும் துண்டு 2 என சுட்டப்பட்ட நிலப்பரப்பு ஆறு குளி இரண்டு தசம் ஐந்து (நி.ப.6 குளி2.5) உடைய ஆதனம் இதில் மேற்படி இலக்கம் 8761 உடைய படத்தில் வடக்குப்பக்கமாக துண்டு 1 என சுட்டப்பட்ட நிலப்பரப்பு இரண்டு குளி பதினாறு. தசம் பூச்சியம் ஏழு (நி.ப.2 குளி16.07) உடைய ஆதனம் இதற்கு எல்லை கிழக்கு: சாவகச்சேரி தனங்களப்பு வீதி. வடக்கு: சாவகச்சேரி நகரசபை விளையாட்டு மைதானம். மேற்கு: சாவகச்சேரி நகரசபை விளையாட்டு மைதானம். தெற்கு: மேற்படி இலக்கம் 8761 உடைய படத்தில் துண்டு 2 என சுட்டப்பட்ட இதன் மிகுதி ஆதனம். இவ்வெல்லை காணியடங்கலும் அதைச்சேர்ந்தவைகளனைத்தும்.

தற்போது றொசாந் பெண் லக்சனா இவ்வாதனத்தை தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளனர். எனவே இவ்வாதனம் தொடர்பாக ஏதாவது ஆட்சேபனை தெரிவிக்க இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த நாளிலிருந்து 30 நாட்களுக்குள் நேரடியாகவோ தபாலிலோ சட்டபூர்வ ஆவணங்களுடன் எழுத்து மூலம் தெரிவிக்க முடியும். வெளிநாடுகளில் வசிப்பவர்களானால் இங்குள்ள உறவினர்களூடாக தெரிவிக்கலாம். ஆட்சேபனை எதுவும் தெரிவிக்காத பட்சத்தில் மேற்குறித்த ஆதன உரிமையாளரது பெயருக்குப் பதிலாக விண்ணப்பதாரரின் பெயரை உட்புகுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இவ்வுட்புகுத்தல் தொடர்பாக ஏற்படும் எவ்வித பிரச்சனைகளுக்கும் நகராட்சி மன்றம் பொறுப்பாளி அல்ல என்பதனைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

(583)

செயலாளர், நகராட்சிமன்றம், சாவகச்சேரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ செய்யும் பாவமே உன்னைக் காட்டிக் கொடுத்து விடும்.

~ பைபிள்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## சாபத்தின் வலிமையைக் கூறும் இதிகாச புராணங்கள்

இராமாயணம், மகாபாரதம் ஆகிய இதிகாசங்களின் நோக்கம் எல்லாம் தர்மத்தை எடுத்துரைப்பதும் மற்றவர்களின் சாபத்துக்கு ஆளாகாமல் இருப்பதை வலியுறுத்துவதுமாகும்.

ஆம், இராமாயணம், மகாபாரதத்துக்கு முற்பட்டது. அவதார புருஷராகச் சித்தரிக்கப்படும் இராமபிரானால் தன் தந்தையின் அந்திமக் கிரியையைச் செய்ய முடியாமல் போயிற்று.

காரணம் என்ன? இங்குதான் தசரதச் சக்கரவர்த்திக்கு முனிபுங்கவர் கொடுத்த சாபம் தெரியவருகிறது.

அதாவது வேட்டைக்குச் சென்ற தசரத மன்னன், மான் என நினைத்து அம்பு எய்ய அஃது ஒரு சிறுவனின் உயிரைப் பறித்துவிடலாயிற்று.

சிறுவனின் தாய் தந்தையர் தசரத மன்னனுக்கு சாபமிடுகின்றனர்.

மன்னா! எங்ஙனம் நாம் புத்திரசோகத்தால் உயிர்துறக்கின்றோமோ அதுபோல நீயும் புத்திரசோகத்தால் உயிர் துறக்குக! என்று சாபமிட்டு தம்முயிர் நீத்தனர்.

காலம் கடந்தது. இராமபிரானுக்குப் பட்டாபிஷேக ஏற்பாடுகள் நடக்கின்றன. அந்தோ! கொடுமை. கைகேயி இராமனைக் காட்டுக்கு அனுப்பும் வரத்தை தசரதனிடம் கேட்க, எதுவும் செய்ய முடியாமல் அவரும் இராமனைக் காட்டுக்கு செல்லுமாறு உத்தரவிட்டு; புத்திர சோகம் தாங்க முடியாமல் உயிர் நீத்தார்.

மாமன்னனாகிய தசரதச் சக்கரவர்த்திக்கு இப்படியொரு கதி வந்துறும் என யாரும் நினைத்திலர்.

என்ன செய்வது முனிபுங்கவரின் சாபம் நிறைவேறிற்று.

இதுபோலத்தான் மகாபாரதத்திலும் கர்ண பாத்திரம் அமைகிறது.

கர்ணன் மிகச் சிறந்த கொடையாளி. இருந்தும் பரசுராமர் கர்ணனுக்கு இட்ட சாபம் போர்க்களத்தில் வந்துற்றது.

ஆம், உற்றபோது கற்றது மறப்பாய் என பரசுராமர் கர்ணனுக்குச் சாபம் இடுகிறார்.

காலம் வேகமாகக் கடக்கிறது. குருசேத்திரத்தில் போர்ச் சங்கொலி கேட்கிறது.

வீஷ்மருக்கு அடுத்தபடியாக கௌரவர் சேனையின் தளபதியாகக் கர்ணன் களமிறங்குகிறான்.

என்ன செய்வது உற்றபோது கற்றது மறப்பாய் என்ற சாபம் போர்க்களத்தில் மூழ்கிறது.

நிலத்தில் புதைபட்ட தேர்ச்சில்லை மீட்டெடுக்க முடியாமல் கர்ணன் கஷ்டப்படுகிறான்.

அவன் கற்ற போர் உபாயங்கள் அத்தனையும் மறக்கப்படுகிறது. சாபம் சூழ்கிறது. மாரகம் நெருங்குகிறது.

அந்தோ! சூரிய புத்திரன் நிலத்திடை வீழ்ந்து உயிர் துறக்கின்றான்.

ஆக, இராமாயணம், மகாபாரதம் ஆகிய இதிகாசங்களின் உட்பொருள் சாபத்துக்கு ஆளாகாதிருக்க வேண்டும் என்ற உண்மையை உணர்த்துவதாகும்.

இதனை இந்த நாட்டின் ஆட்சியாளர்களும் பேரினவாதிகளும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

## நூல்கள் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

மறைந்த எழுத்தாளர் குப்பிழான் ஐ.சண்முகனின் முதலாம் ஆண்டு நினைவேந்தலை முன்னிட்டு இரசனைக் குறிப்புக்கள் சிறுகதைகள் ஆகிய இரு நூல்களின் வெளியீட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு குப்பிழான் சிவபூமி ஆச்சிரம மண்டபத்தில் ஓய்வுநிலை கிராம அலுவலர் சோ.பரமநாதன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் செஞ்சொற் செல்வர் கலாநிதி. ஆறு. திருமுருகன் கலந்து கொள்ளவுள்ளார். (நி-6-136)

## ஜெயந்திவிழா

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீலஸ்ரீ முருகுப்பிள்ளை கடவுள் (மௌனகுரு) சுவாமிகளின் 119 ஆவது ஜெயந்தி விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தில் இடம்பெறவுள்ளது.

பூசை ஆராதனைகளைத் தொடர்ந்து சொற்பொழிவுகளும்இடம்பெறும் அதனைத் தொடர்ந்து மதியம் 12 மணியளவில் சந்நிதியான் ஆச்சிரமத்தில் மகேஸ்வர பூசையும் நடைபெறும். (நி-6)

## துடுப்பாட்ட வலைப்பந்தாட்ட போட்டிகள்

(கரணவாய்)

பருத்தித்துறை, தெல்லிப்பளை ஆதார மருத்துவமனை தாதிய உத்தியோகத்தர்களுக்கிடையிலான துடுப்பாட்ட மற்றும்மகளிருக்கானவலைப் பந்தாட்டப் போர் மே மாதம் 1 ஆம் திகதி புதன்கிழமை பி.ப 1.30 மணிக்கு நெல்லியடி கொலின்ஸ் விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இவ்விழாவில் பிரதம விருந்தினராக பருத்தித்துறை ஆதார மருத்துவமனையின் மருத்துவ அத்தியட்சகர் கலாநிதி திருமதி தயாளினி மகேந்திரன் கலந்து கொள்ளவுள்ளார். (நி-6-60)

## 11 நாட்களில் இ.போ.சவுக்கு 1500 மில்லியன் வருமானம்

(கொழும்பு)

கடந்த ஏப்ரல் 5ஆம் திகதி முதல் 16ஆம் திகதி வரை இலங்கை போக்குவரத்து சபைக்கு சுமார் 1500 மில்லியன் ரூபா வருமானம் கிடைத்துள்ளதாக இலங்கை போக்குவரத்து சபை தலைவர் லலித் டி அல்விஸ் தெரிவித்துள்ளார்.

ஒரு வாரத்தில் அதிவேக வீதியின் வருமானம் 130 மில்லியன் ரூபா எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


கடந்த 12 நாட்களில் அதிக எண்ணிக்கையிலான பஸ்கள் இயக்கப்பட்டதாகவும், புத்தாண்டு தினத்தில் நாடு முழுவதும் 1,200 பஸ்கள் இயக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7,10)

## பவளவிழாவும் நூல்வெளியீடும்

ஜீவநதி ஏற்பாட்டில் பேராசிரியர் மா.கருணாநிதியின் வாழ்வும் படைப்பும் நூல்வெளியீடும், பவளவிழாவும் இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப 3.45 மணிக்கு வதிரி, பிரசாந்தி இல்லத்தில் சுபரணீதரன்தலைமையில் இடம்பெறவுள்ளது. (நி-6)

## பரமபிதா காட்டிய பாதை

### இயேசுவின் உயிர்ப்பு நம்பிக்கையை வளர்க்கட்டும்



செடியும் கிளையுமாக, கிளையும் கொடியுமாக இயேசுவோடு நெருக்கமாக இருப்போம்.

"உண்மையான திராட்சைச் செடி நானே. என் தந்தையே அதை நட்டு வளர்ப்பவர். என்னிடமுள்ள கனிகொடாத கொடிகள் அனைத்தையும் அவர் தறித்து விடுவார். கனிதரும் அனைத்துக் கொடிகளையும் தருமாறு கழித்து விடுவார்" "நீங்கள் என்னுள்ளும் என் வார்த்தைகள் உங்களுள்ளும் நிலைத்திருந்தால் நீங்கள் விரும்பிக் கேட்பதெல்லாம் நடக்கும். நீங்கள் மிகுந்த கனி தந்து என் சீடராய் இருப்பதே என் தந்தைக்கு மாட்சி அளிக்கிறது." இன்று எமக்குத்தரப்படும் பைபிளின் யோவான் நற்செய்தியின் 15:01-08 வரையான பகுதிகள் எமக்கு கூறும் வார்த்தைகள் இவை. இயேசு எவ்வாறு திராட்சைக் கொடிகள் பற்றி பேசமுடியும் என்று நாம் கேட்கலாம். பாலஸ்தீனத்தின் அனைத்துப் பகுதிகளிலும் திராட்சைச் செடி வளர்க்கப்படுகிறது. திராட்சைச்செடியை வளர்க்கிறபோது, அதற்கான தனிக்கவனம் செலுத்த வேண்டும். திராட்சைச் செடி தன் வசதிக்கு ஏற்றாற் போல கொடிகளைப்படர விட்டாலும், அது நல்ல முறையில் வெட்டப்பட்டு, பராமரிக்கப்பட வேண்டும். இல்லையென்றால் அதனால் பயன் இல்லை. இவற்றை நன்கு அறிந்தவராகத்தான் போகிறார். பைபிளில் உள்ள பழைய ஏற்பாட்டு புத்தகங்கள் முழுவதும் இஸ்ரயேல் இனம் திராட்சைச்செடியோடு ஒப்பிடப்படுகிறது: "எகிப்தினின்று திராட்சைக்செடி ஒன்றைக் கொண்டு வந்தீர் வேற்றினத்தாரை விரட்டிவிட்டு அதனை நட்டு வைத்தீர் அதற்கென நிலத்தை ஒழுங்குபடுத்திக் கொடுத்தீர் அது ஆழ வேரூன்றி நாட்டை நிரப்பியது. அதன் நிழல் மலைகளையும் அதன் கிளைகள் வலிமைமிகு கேதுரு மரங்களையும் மூடின. அதன் கொடிகள் கடல் வரையும் அதன் தளிர்கள் பேராறுவரையும் பரவின."

இஸ்ரயேல் மக்களின் பாரம்பரியத்தில் ஊறிப்போன இந்த உருவகத்தை இயேசு இன்னும் ஒரு படி மேலே எடுத்துச் சென்றார். இறை தந்தையால் நட்டு வளர்க்கப்படும் ஒருதிராட்சைச் செடியாக தன்னையும், தன்னை பின்பற்றுவோரை, அச்செடியின் கிளைகளாகவும் உருவகித்துப்பேசினார். பைபிளில் உள்ள புதிய ஏற்பாட்டு புத்தகத்தில் இயேசு தன்னை திராட்சைச்செடியாகவும், எம்மை அதன் கிளைகளாகவும் உருவகப்படுத்தி பேசுகிறார் கனிதரும்போது நாம் - கிளைகள் தானாகக் கனி தர இயலாது. செடியோடு இணைந்திருக்கின்ற கொடிதான் உயிரோடு இருக்கும். செடியை விட்டுப் பிரிந்த கொடி மடிந்துபோகும். இயேசுவை விட்டுப் பிரிந்து நாம் எதுவும் செய்ய இயலாது. நமது ஆற்றல்கள், திறமைகள், கொடைகள் அனைத்தும் அவரிடமிருந்தே நாம் பெற்றுக்கொள்கிறோம். எனவே, அவரோடு ஒன்றித்திருக்க வேண்டும். நீங்கள் மிகுந்த கனி தந்து என் சீடராய் இருப்பதே என தந்தைக்கு மாட்சி அளிக்கிறது."

என்னும் பைபிள் பகுதியை நோக்குவோம். இயேசுவை பின்பற்றுவோர் மிகுந்த கனிதர வேண்டும் என்பது இயேசுவின் எதிர்பார்ப்பு. இங்கு கனிகள் பற்றி இயேசு கூறிய பகுதிகளை குறிப்பிடுவது நன்று "கனி தராத அத்தி மரத்தை இயேசு சபிக்க முன்வந்தார்." நல்ல நிலத்தில் விழுந்த விதைகள் முப்பது. அறுபது, நூறு மடங்கு எனப் பலன் தந்தன என்கிறார் இயேசு." எனவே நாம் மிகுந்த கனி தருபவர்களாக வாழவேண்டும். ஒவ்வொருவருடைய வாழ்க்கையும், ஒரு சிலருக்கு அல்லது பலருக்குப் பயன் உள்ளதாக அமைய வேண்டும் என்பதே இயேசுவின் விருப்பம், எனவே, கனி தரும் சொற்களைப் பேசுவோம், மிகுந்த கனிதருமாறு வாழ்வோம்.

இத்தகைய கனி தரும் வாழ்க்கையை வாழ, ஒருவர் இறைவனோடு இணைந்திருக்க வேண்டும். இக்கருத்தை இயேசு இப்பகுதியில் பல முறை உணர்த்துகிறார். இணைந்திருத்தல் நிலைத்திருத்தல் என்னும் வார்த்தைகளை இதற்கென பல முறை பயன்படுத்துகிறார். "இணைந்து இருந்தாலன்றித் தானாக கனிதர இயலாது". இணைந்திருந்தால் அவர் மிகுந்த கனி தருவார்". "என்னை விட்டுப் பிரிந்து உங்களால் எதுவும் செய்ய இயலாது". "நீங்கள் என்னுள்ளும் என் வார்த்தைகள் உங்களுள்ளும் நிலைத்திருந்தால் நீங்கள் விரும்பிக் கேட்பதெல்லாம் நடக்கும்." இவ்வார்த்தைகள் இதற்குச் சான்றாகும். இயேசுவோடு இணைந்திருப்பதன் நெருக்கம் பல பலன்களைக் கொடுக்கவல்லது. இயேசுவை விட்டுக் கொஞ்சம் விலகினாலும் அந்த இழப்பு மிக மிகப் பெரிது. கொஞ்சம்தானே இயேசுவை விட்டு விலகியிருக்கிறேன். ஆகவே கொஞ்சம்தானே நட்டம் என்ற கணக்கு, ஆன்மீகத்தில் தப்புக்கணக்கு. இயேசுவை விட்டு கொஞ்சம் விலகினாலே நாம் எல்லாவற்றிலும் நட்டமடைந்துவிடுவோம். நாம் இயேசுவோடு இருந்தால், "விரும்பிக் கேட்டதெல்லாம் கிடைக்கும்" செடியும் கிளையுமாக, கிளையும் கொடியுமாக இயேசுவோடு நெருக்கமாக இருப்போம். இணைந்து இனிது வாழ்வோம்.

ம.பிரான்சிஸ்க்,
கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மன்னார் ஊடகவியலாளர் எஸ்.ஜெகன் எழுதிய மகாவம்ச விஜயனும் மன்னார் கட்டுக்கரை பிரதேசமும் சங்க இலக்கிய நூல்கள் மூலமாக இடப்பெயராய்வு நூல் வெளியீடு கடந்த செவ்வாய்க்கிழமை மன்னார் ரோட்டரி கழகத்தின் தலைவர் பொறியியலாளர் ரொபேட் பீரிஸ் தலைமையில் மாவட்டச் செயலகத்தின் ஜெய்க்கா மண்டபத்தில் இடம்பெற்றது.

(படம்:ஜோசப் நயன்)

# சுகாதார சீர்கேடாக காணப்படும் பேருந்து நிலைய பொதுக்கழிப்பிடம்

## பயணிகள், மக்கள் அசௌகரியம்

(குருமன்காடு)

வவுனியா புதிய பேருந்து நிலையத்தில் பொதுமக்கள் பாவனைக்காக இருக்கும் இரண்டு தொகுதி மலசலகூடங்களும் சீரான முறையில் இல்லை என்பதுடன் இதில் ஒரு தொகுதி மலசலகூடம் பாவனையில் இல்லாமல் தேசிய போக்குவரத்து அதிகாரசபையினர் பூட்டி வைத்துள்ளனர்.

இதேவேளை குறித்த மலசலகூடங்கள் சுகாதார சீர்கேடாக காணப்படுவதாலும் பயணிகளும் மக்களும் அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளனர். தற்போது வரை ஒரு பொதுக் கழிப்பிடமே பாவனைக்கு உபயோகிப்பதனாலும் தொற்று நோய்களுக்கு உள்ளாக வேண்டிய நிலை காணப்படுகிறது. சம்பந்தப்பட்ட தரப்புக்கள் குறித்த விடயத்தில் கவனம்செலுத்திஇரண்டு பொதுக் கழிப்பிடங்களையும் சீரான முறையில் நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என பயணிகள், மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.(நி-6-250)

# கபடி, வொலிபோல் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண விளையாட்டுத் திணைக்களம் நடத்தும் மாவட்ட செயலக அணிகளுக்கிடையிலான கடற்கரை கபடி மற்றும் கடற்கரை வொலிபோல் போட்டிகள் இன்று ஞாயிற்றுக்கிழமை முல்லைத்தீவு கடற்கரை மைதானத்தில் நடைபெறவுள்ளது. (நி-6)




# விண்ணப்பம் கோரல்

(கிளிநொச்சி)

இளைஞர் சேவைகள் மன்றத்தின் கிளிநொச்சி மாவட்ட காரியாலயத்தின் கீழ் இயங்கும் மொழிப் பயிற்சி நிலையத்தில் சிங்களம், ஆங்கில மொழிக்கற்கை நெறிகளுக்கும் விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

பயிற்சிக் காலம்- 6 மாதம் பயிற்சி காலத்தினை பூர்த்தி செய்பவர்களுக்கான அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்களும் வழங்கப்படும். எனவே ஆர்வம் உள்ள இளைஞர், யுவதிகள் விண்ணப்பங்களை கிளிநொச்சி, 155 ஆம் கட்டை ஏ-9 வீதி, தேசிய இளைஞர் சேவைகள் மன்ற நிலையம் பொறுப்பதிகாரி பயிற்சி நிலையம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்க முடியும். மேலதிக தகவல்களுக்கு 077 358 9165 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும் என தேசிய இளைஞர் சேவைகள் மன்ற மாவட்ட காரியாலய உதவிப்பணிப்பாளர் அறிவித்துள்ளார்.(நி-6)

# ட்ரோன் மூலம் மருந்து தெளிப்பு

(மன்னார்)

மன்னார் நானாட்டான் கமநல சேவைகள் பிரிவில் உள்ள வஞ்சியன்குளம் கமக்காரர் அமைப்பிற்கு உட்பட்ட வஞ்சியக் குளக்கண்டத்தில் ட்ரோன் மூலம் மருந்து தெளிக்கும் நடவடிக்கை நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன், கமநல அபிவிருத்தி உதவி ஆணையர்,விவசாய மாகாண பிரதிப் பணிப்பாளர்,கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் விவசாய திணைக்கள உத்தியேகத்தர்கள் விவசாயிகள் கலந்து கொண்டிருந்தனர். (நி-6-285)

# 5 கிராம் ஹெரோயினுடன் பெண் ஒருவர் கைது

(தருமபுரம்)


ஐந்து கிராம் ஹெரோயின் போதைப் பொருளுடன் பெண் ஒருவர் பொலிஸாரால் கைது.

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட திருநகர் பகுதியில் நேற்று முன்தினம் கிளிநொச்சி பொலிஸார் முன்னெடுத்த சோதனை நடவடிக்கையின் போதே வீடு ஒன்றில் மறைவாக வைக்கப்பட்டிருந்த ஐந்து கிராம் ஹெரோயினுடன் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அந்நபரை கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (நி-6-316)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3101

மாதுளா





சிந்து




சியானி




பவானி




தனுசியா




சுதர்சன்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜப்பான்...

ஜப்பானிய வெளிவிவகார அமைச்சர் யோகோ கமிகாவா இரண்டு நாள் உத்தியோக பூர்வ விஜயமாக அடுத்த மாதம் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரதமர் தினேஷ் குணவர்தன, வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி ஆகியோரை அவர் சந்திக்கவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம-7,10)

## கிருமித்...

உயிரிழந்தவராவார்.

அவருக்கு உடலில் கட்டு இருப்பதாகத் தெரிவித்து கடந்த புதன்கிழமை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இம் மரணம் தொடர்பில் நேற்று சனிக்கிழமை பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தம் சிவராஜா விசாரணைகளை மேற்கொண்டு உடற்கூற்று பரிசோதனைக்கு உத்தரவிட்டார்.

உடற்கூற்று பரிசோதனையை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரி கே.வாசுதேவா மேற்கொண்டார்.

இதன்போது கிருமித்தொற்று ஏற்பட்டு மரணம் சம்பவித்துள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது.(ம-7,10,60)

## ஏற்றுமதிப்...

னைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் முறைமையே நாட்டுக்கு அவசியமாவதாக சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, நிறைவேற்று ஜனாதிபதி முறையை பேணுவதா?, இல்லையா? என்பது தற்போதைய பிரச்சினை அல்லவென தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதாரத்தின் எதிர்காலப் போக்கை தீர்மானிப்பதற்கான வாய்ப்பை மக்கள் இழந்துவிடக்கூடாதெனவும் அவர் வலியுறுத்தினார்.

நாம் எந்த வழியில் செல்ல வேண்டும் என்பதை முதலில் தீர்மானிக்க வேண்டும் எனவும் ஒரு அரசாங்கம் நியமிக்கப்பட்ட பிறகு ஒரு ஐந்தாண்டு திட்டம் முன்வைக்கப்படும் நிலையில், அந்த திட்டத்தின்படி அரசாங்கமே அனைத்தையும் வழங்குவதாகவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இவ்வளவு காலமும் திட்டங்கள் மாத்திரமே காணப்பட்டதால், மக்கள் இன்னும் வறுமையில் வாடும் நிலை ஏற்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார். (ம-7,10)

## ஐ.எம்.எப்பின்...

அவர் இதனை தெரிவித்தார்.

அடுத்த கடன் தவணைக் குரிய இரண்டாவது கடன் மீளாய்வை இலங்கை நிறைவு செய்துள்ளதாகவும் குறித்த மீளாய்வின் அடிப்படையில், ஊழியர் மட்ட இணக்கப்பாடு ஏற்படுத்தப்பட்டுள்ள நிலையில், நிறைவேற்றுக் குழுவின் இணக்கப்பாடு எட்டப்படாதுள்ளதாக அவர் கூறினார்.

அந்த இணக்கப்பாட்டை ஏற்படுத்திக்கொள்வதற்கு முழுமைப்படுத்தப்பட வேண்டிய நிபந்தனைகள் சில காணப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார். (ம-7,10)

## காங்கேசன்...

சார்த்த சேவையில் ஈடுபடவுள்ளது.

மே மாதம் 13ஆம் திகதி தொடக்கம் ஒவ்வொரு நாளும் கப்பல் சேவைகள் நாகையிலிருந்து காலை 8 மணிக்குப் புறப்பட்டு மதியம் 12 மணிக்கு காங்கேசன்துறையை வந்தடையும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பின்னர் பிற்பகல் 2 மணிக்கு காங்கேசன் துறையிலிருந்து புறப்பட்டு மாலை 6 மணிக்கு நாகையைச் சென்றடையும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இரு வழிப் பயணத்துக்காக அண்ணளவாக 34 ஆயிரத்து 200 ரூபாய் அறவிடப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அத்தோடு ஒவ்வொரு பயணியும் தம்முடன் 20 கிலோ வீதம் 3 பொதிகளை எடுத்துச் செல்ல முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7,10)

## மனித முக...

திலேயே இந்த ஆடு பிறந்துள்ளது.

அந்தப் பகுதியில் உள்ள வீடொன்றில் வளர்ந்த ஆடு, இந்த குட்டியை ஈன்றுள்ளது.

எவ்வாறாயினும், குறித்த ஆட்டுக் குட்டி பிறந்த [illegible] உயிரிழந்துள்ளது. (ம-7,10)

## யாழில்...

தெரிவு செய்யப்பட்ட 131652 குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கான அரிசி விநியோகம் கடந்த 20ஆம் திகதி முதல் கிராம அலுவலர் பிரிவு ரீதியாகவும், கிராம அலுவலர் பிரிவு கொத்தணி ரீதியாகவும் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

யாழ். மாவட்டத்தின் மொத்த சனத்தொகையோடு ஒப்பிட்டு நோக்குகின்ற போது 62.66 வீதமான குடும்பங்கள் மேற்படி அரிசி விநியோகத்திற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

யாழ்.மாவட்டத்தில் அரிசி வழங்குவதற்கு சம்மதம் தெரிவித்திருந்த, பதிவு செய்யப்பட்ட 17 அரிசி ஆலைகளூடாக அரிசி விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில், 110220 குடும்பங்களுக்கான அரிசி, குறித்த அரிசி ஆலைகள் மூலம் விநியோகிக்கப்பட்டுள்ளதுடன் அவற்றில் 98175 குடும்பங்களுக்கு பிரதேச செயலாளர்களால் கிராம மட்ட அலுவலர்களூடாக அரிசி வழங்கப்பட்டுள்ளது.

அதேநேரம், தொடர்ச்சியாக அரிசியை பொதுமக்களுக்கு விநியோகிக்கின்ற நடவடிக்கையினை பிரதேச செயலாளர்கள் கிராம மட்ட உத்தியோகத்தர்கள் மூலம் முன்னெடுத்து வருகின்றனர்.

அதேவேளை, நெடுந்தீவு, காரைநகர், சாவகச்சேரி, சண்டிலிப்பாய், சங்கானை, கரவெட்டி, பருத்தித்துறை மற்றும் மருதங்கேணி ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் 90 வீதத்திற்கும் மேற்பட்ட பயனாளிகளுக்கு அரிசி விநியோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7,10)

## அமெரி...

கடற்பரப்பில் உள்ள மற்றும் மொரு கப்பல் மூலம் அவர்களுக்கு தேவையான வசதிகளை செய்து கொடுக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்த கப்பல் இந்தியாவின் சென்னை துறைமுகத்திற்குள் நுழைய அனுமதி கோரிய போதிலும் இந்திய அரசு அனுமதி வழங்கவில்லை.

சீன ஆய்வுக் கப்பல் ஒன்று நாட்டிற்குள் பிரவேசிப்பதற்கான கோரிக்கை முன்னதாக நிராகரிக்கப்பட்டதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது. (ம-7,10)

# கால்வாயில் தவறிவிழுந்த

## ஒரு வயது குழந்தை பலி

பொலநறுவை, இசட் கால்வாயுடன் இணைக்கப்பட்ட கால்வாயில்விழுந்து குழந்தை ஒன்று உயிரிழந்துள் ளது.

கால்வாயில் விழுந்த குழந்தையை தமது வீட்டில் இருந்து இரண்டு கிலோ மீற்றர் தொலைவில் பிரதேசவாசி ஒருவர் மீட்டுள்ளார்.

பொலநறுவை, வெலிகந்த, சிங்கபுர, ஜெயவிக்ரம கிராமத்தை சேர்ந்த இசுரு ஜயநாத்பண்டார என்ற ஒரு வயது மற்றும் பத்து மாதமான ஆண் குழந்தையே இந்த அனர்த்தத்தில் உயிரிழந்துள்ளது. (ம-7,10)

## பாடசாலை...

குச் செல்வதாக வீட்டில் கூறிச் சென்ற மாணவி ஒருவரே இவ்வாறு இரவாகியும் வீடு திரும்பாமையால் பெற்றோரால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சாவகச்சேரி கச்சாய் வீதிப் பகுதியைச் சேர்ந்த மாணவி ஒருவரே இவ்வாறு காணாமல் போயுள்ளார்.

முறைப்பாட்டை அடிப்படையாக வைத்து சாவகச்சேரிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,10,30)

மஹஜன சம்பத
திகதி 2024.04.27
சீட்டிழுப்பு இலக்கம் 5458
B 9 5 3 6 1 6
அத சம்பத
B 3 6 1 6
சீட்டிழுப்பு இலக்கம் 0033
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2024.04.27
சீட்டிழுப்பு இலக்கம் - 1488
X 39 48 59 68 X
Double Chance 20902

மெகா பவர்
திகதி 27/04/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1806
X 08 02 04 25 46
75395

லக்கி 7 VIP
திகதி 2024.04.27
சீட்டிழுப்பு இலக்கம் 0284
G 0 7 9 6 4 0 G

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3700
சீட்டிழுப்பு திகதி 27.04.2024
D 03 41 56 79
D 64791

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.04.27
சீட்டிழுப்பு இலக்கம் 0767
தனுசு 28 42 57 62 தனுசு
89709 16

உத்தியோகபூர்வ முடிவுகள்
27.04.2024 வெற்றி வாரம் 166 வர்ணம் நீலம்
B 9 3 2 4 1 0
M 73293
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 21,227,372.00
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2432 வர்ணம் நீலம் 27.04.2024 சனிக்கிழமை
39 50 56 64 T
70631
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 85,371,064.80

சனிதா
திகதி 2024.04.27 வெற்றி வாரம் 4593
13 16 36 68 Z
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.57,086,016.40
00913

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4144 வர்ணம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 2024.04.27 தினம் சனிக்கிழமை
05 28 43 53 கும்பம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 5,775,091.60
509876

கப்ருக
V 40 39 58 72 74
1608 சிவப்பு 27.04.2024 சனிக்கிழமை
619981
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 519,581,150.20

ADA KOTIPATHI
சனிக்கிழமை
வெற்றி வாரம் : 2258
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 108,872,752/-
07 08 35 52 T
482084

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலிசப்ரி சவுதி விஜயம்

(கொழும்பு)

வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி சவுதி அரேபியாவுக்கு விஜய மொன்றை மேற்கொள்ளவுள்ளார் என வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

சவுதி அரேபியாவில் நடைபெறவுள்ள உலகப் பொருளாதார மன்றத்தின் உலகளாவிய ஒத்துழைப்பு வளர்ச்சி மற்றும் வலுத்திறன் குறித்த சிறப்புக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி அங்கு விஜயம் செய்ய வுள்ளார்.

இதன்போது அவர், சவுதி அரேபியா உட்பட பல நாடுகளைச் சேர்ந்த அமைச்சர்களுடன் இருதரப்பு சந்திப்புகளை நடத்தவுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. (நி-6)


## வேலைவாய்ப்பு

யாழ் நகர் மத்தியில் இயங்கும் பிரபல Fancy Shop ஒன்றிற்கு வேலையாட்கள் தேவை.
ஆண்/ பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
- பகுதி நேர வேலைவாய்ப்பு வசதியும் உண்டு.
- EPF/ETF வசதிகளும் உண்டு.

(19069)

**075 762 2092**

## வங்கி மீதி வசதிகள் மற்றும் விசா ஆலோசனை

சகல நாடுகளுக்குமான விசா ஆலோசனை மற்றும் வங்கி மீதி (Show Money) வசதிகள்
தொடர்புகளுக்கு: (551)

**074 17 37 684**

## வேலையாள் தேவை

- சமையலாளர்
  - மசாலா தோசை ,அப்பம்,பூரி செய்யக்கூடியவர்
  - ரொட்டி வேலை செய்யக்கூடியவர்
  - சிற்றுண்டி செய்யக்கூடியவர்
- உணவு பரிமாறுபவர்
  ஆண் / பெண்
- சமையல் உதவியாளர்

(582)

**075 068 3810**

## CANADA VISA

- உங்கள் குடும்பத்துடன் பயணிக்கலாம்.
- வங்கி வசதிகள் செய்து தரப்படும்.
- 20 வருட அனுபவம், 1800 பேரை அனுப்பி வைத்துள்ளோம்.
- கிடைத்தவர்களை நேரடியாகப் பார்வையிடலாம். (511)

**021 222 5686**
**076 424 7111**
**Expo Net Overseas Consultants**
345, Kasthuriyar Road, Jaffna.

## மணமகள் தேவை

B.Sc,MSc படித்த இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த லக்கினத்தில் செவ்வாய் உள்ள 30 வயதான குடும்பச் சுமைகளற்ற வேண்டத்தகாத எப்பழக்கங்களும் அற்ற கனிவாக,மென்மையாகப் பேசும் நல்ல தொழில் பார்க்கும் கண்ணியமான நபருக்கு பொருத்தமான ஒரு பட்டதாரிப் பெண் வேண்டப்படுகின்றார். (558)

**077 729 9304**

## கனடாவில் உயர்கல்வி

குறைந்த கட்டணத்தில்
இலகுவாக செல்லக்கூடிய நேர்வழி

**STUDY IN UK & WORK VISA**

ஆங்கில பயிற்சியுடன் கூடிய வெளிநாட்டு உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்பு
வெற்றிகரமான 13 வருட சேவையில்

**WEC COLLEGE**
புதிய உயர்கல்லூரி வளாகம்
ஆரியகுளம்,யாழ்ப்பாணம்
**077 64 212 64**
கிளை: சங்கத்தானை,சாவகச்சேரி

## Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1 Kg வெள்ளை சீனி | - 257/= | |
| 1 Kg Prima கோதுமை மா | - 187/= | |
| 1 Kg 7 star கோதுமை மா | - 179/= | |
| 1 Kg றவை | - 286/= | |
| 1 Kg நீட்டல் பச்சை | - 166/= | |
| 1 Kg அரிசி மா | - 200/= | |
| 1 Kg சம்பா அரிசி | - 230/= | |
| 1 Kg சிவப்பு பருப்பு | - 285/= | |
| 1 Kg கட்டி உப்பு | - 80/= | ~~105/=~~ |
| 1 Sun பப்படம் | - 185/= | ~~210/=~~ |
| 1 Lux றோஸ் சோப் | - 145/= | ~~175/=~~ |
| 330g டிகிரி மாரி பிஸ்கட் | - 270/= | ~~330/=~~ |
| 750ml New VSP நல்லெண்ணை | - 1450/= | ~~1550/=~~ |
| 180ml Sunsilk சம்போ | - 440/= | ~~480/=~~ |
| 1 Baby Soap | - 115/= | ~~145/=~~ |

450g Anchor
1049/=



~~1110/=~~

தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள்.
மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு எமது
Facebook:- happy basket.lk
இனை நாடவும்

பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி. (596)

Happy Supermarket
**0777 8080 30**

## V2 VISA SERVICES கனடா

077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
**விமான பயணச்சீட்டுக்கள்**
- Student Visas
- Online Appointments
- இந்தியா Visas
- Online Visas - All countries
- Police Clearance
- Travel Insurance

Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-0220)

## உடனடி வேலை வாய்ப்புக்கள்

**EXECUTIVE OFFICER**



- சம்பளம் - 25000/= தொடக்கம் 50000/= (நிபந்தனைகளுக்கு உட்பட்டது)
- வயது-22 தொடக்கம் 35
- தகுதி- பட்டதாரிகள் (ஆங்கில அறிவு அவசியமானது) (C-0220)

**V2 TRAVELS**
AIRTICKETING, VISA SERVICES, INTERNATIONAL COURIER போன்ற துறைகளில் பயிற்சி அளித்து உடனடி வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படும்
49A ,சப்பல் லேன் யாழ்ப்பாணம்
0777-068-777


# மணிவிழா வாழ்த்தும் சேவைநலன் பாராட்டும்



BEST WISHES

ஆசிரியை
## திருமதி கோமதி கனகலிங்கம்
(SLTS - I (B.A Dip in Com)

**சேவை விபரம்**

- யா/புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரி - 11.01.1993 - 29.01.1997
- வ/வவுனியா இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி - 30.01.1997 - 09.03.1999
- வ/வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம் - 10.03.1999 - 17.01.2003
- யா/புனித தெரேசாள் மகளிர் கல்லூரி - 20.01.2003 - 04.11.2012
- யா/அச்சுவேலி மத்திய கல்லூரி - 05.11.2012 - 26.04.2024

எமது பாடசாலையில் அர்ப்பணிப்புடன் சேவையாற்றி 27.04.2024 அன்று ஓய்வுபெறும் திருமதி கோமதி கனகலிங்கம் அவர்களை பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: ஆசிரியர் கழகம்
யா/அச்சுவேலி மத்திய கல்லூரி.

(540)

# மரண அறிவித்தல்

மலர்வு
31 - 08 - 1943



உதிர்வு
24 - 04 - 2024

## நடராஜா இராஜேஸ்வரன்

யாழ். கரவெட்டி யார்க்கருவைப் பிறப்பிடமாகவும் கரவெட்டி பெரியதோட்டத்தை வதிவிடமாகவும் பிரித்தானியா லண்டன் Surreyஐ நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட நடராஜா இராஜேஸ்வரன் அவர்கள் 24.04.2024 புதன்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நடராஜா-சிவபாக்கியம் தம்பதிகளின் மூத்த மகனும் காலஞ்சென்ற திரு.திருமதி சுப்பிரமணியம் தம்பதிகளின் மருமகனும் காலஞ்சென்ற திருமதி சரஸ்வதி அவர்களின் அன்புக் கணவரும் வானதி (லண்டன்), வாசவன் (லண்டன்), வாகீசன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற இராஜகோபாலு மற்றும் இராஜலிங்கம்(சுவிஸ்), இராஜரட்ணம் (இலங்கை), காலஞ்சென்றவர்களான இராஜேஸ்வரி, இராஜகுலோஜனா ஆகியோரின் மூத்த சகோதரரும் ஸரன் (லண்டன்), கேஷனா (லண்டன்), ஆரபி (லண்டன்), அபிரா (லண்டன்), ஷாமிரா (லண்டன்), அக்ஷனா (லண்டன்), அஷ்வா (லண்டன்) ஆகியோரின் பாட்டனாரும் ரதீஸ்(லண்டன்), ரம்யா, சௌமியா, அருணா (லண்டன்), அஞ்சனா, சிந்துஜா ஆகியோரின் பெரியப்பாவும் நிரூபன், சாருபன், நீரஜா (பிரான்ஸ்), மாதங்கி ஆகியோரின் தாய்மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் லண்டனில் நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்

இ.வாசவன் (மகன் -லண்டன்)
+4479 0380 2843

தகவல்:
குடும்பத்தினர்

(573)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.04.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.